629

ARYA DHARMAM
TAMIL WEEKLY.

REGD. No. M. 2913.

ஆர்யதர்மம்

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]

ஜீவிய சந்தா ...	ரூ. 50
ஒரு வருஷ சந்தா ...	ரூ. 3
அறுமாத சந்தா ...	ரூ. $1\frac{1}{2}$

தனிப்பிரதி ஓணு
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

விளம்பர விகிதம்.

ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை	ரூ. 20
அரைப்பக்கம் ஒரு தடவை	ரூ. 21
ஒருபத்தி ஒரு தடவை	ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு ஒரு தடவை	அணு 8

நீண்டகால விளம்பரங்களுக்கு தனி சார்ஜ்.

பு-25 | கும்பகோணம் விக்கிரம-வஸ்ரு ஆடி-மீ 3உ 1940-வஸ்ரு ஜுலைமீ 18உ | ஸ-29

வாரக் குறிப்புகள்

[ஸ்ரீவத்ஸ வே. ஸோ. சர்மா.]

உசிதமில்லை! ஓர் நண்பர் சென்னைக்கு காங்க்ரஸை அழைக்கிருர். ஏழ்மை, ஜாதிச் சண்டை, தார்மிகர் மநம் நொந்திருத்தல் ஆகிய பலகாரணங்களைக் கொண்டும் நம் மாகாணத்திற்கழைப்பது நல்லதல்ல. அன்றியும் தற்போது ஸபைகாட்டை அழித்து டாம்பிக செலவு செய்வதல் அதை நாம் வரவேற்பதற்கில்லை !!

ஒரிஸா வெள்ளப்பாழ் !! இவ்வாண்டும் அம்மாகாணம் ஜலத் தீமைக்குப் பாத்ரமாகிவிட்டது! சொல்லமுடியாத கஷ்டத் [illegible] ஆளாகினர். அடிக்கடி இங்ஙனம் ஆபத்து வராமல் தடுக்க வேண்டுமானல் அவரவர் தம் தம் வர்ண ஆச்ரம தர்மத்தை ஒழுங்காக நடத்தி பகவானது கருணைக்குப் பாத்ரராக வேண்டும் என நினைவூட்டுகிறேம்!

பயத்தையே அதிகரிக்கும் !! இந்திய அரசாங்கம் முன்போல் ஒரு ரூபாநோட்டையும் இரண்டு ரூபாநோட்டையும் போட உத்தேசிக்கின்றனர். இது இப்போது செய்வது அவ்வளவு உசிதமல்ல !!

பாபிகளின் அட்டூழியம்!! யதாராஜா ததா ப்ரஜா! என்றபடி மதுரையில் அடிபட்ட தொண்டரை "சாகவில்லையே" என்ற ராஜாஜியும்! ஸ்ரீரங்கத்தில் பெண் மக்களை கேவலமாக பேசி தானும் திட்டு வாங்கிக்கொண்டு மிளகு பொடியை கண்ணில் தூவி பெரும் பொய் கூறிய ராஜனும் தலைவரெனில் அவர் சீடர் மதுரை துக்க தினக்கொண்டாட்டத்தில் தார்மிகர்மீது கல்லெறிந்ததில் ஆச்சர்யமென்ன?

ப்ராயோபவேசமும் போதா!! என் சீடரே ஸத்யஸந்தர்! தார்மிகர்கள் பொய்யர் என்று கூறும் காந்திஜி இத்தகைய சீடர் பாபங்களுக்கு எத்தினை நாள் பட்டினி கிடந்தாலும் பாபம் நீங்காது!

கடைத் தேங்காய் தர்மம்!! மதபரிபாலன ஸபையார் கோவில் அதிகாரிகளுக்கு பொது ஜனங்களிடம் பணம் வசூலித்து ஏழைக் கன்னமிட்டு பிரார்த்திக்க சொல்கிருர்! என்னே தர்மம்!!ஸ்வாமி சொத்தை சம்பளமாக வாங்குமிவர்கள் தம் செலவில் இதைச்செய்தால் பாபமகலுமன்றே? அசுத்தமான கோவில்களை இவகள் முன்னே சுத்தம் செய்ய முயலட்டும் !

யார் பொறுப்பாளர்? மதுரைக்கருகில் புளியங்குளம் கிராமத்தில் ஒரு சாரார் ஓர் அம்மன் கோவிலில் பலாத்காரமாக நுழைந்து போலீஸார் ஒருவனைச்சுட நேர்ந்தது! இது ஏதேனும் ஆலயப்பிரவேச ஸம்பந்தமான கிளர்ச்சியா? உண்மை யாது?

நிதானம் வேண்டும் !! வங்க அரசாங்கம் போஸைக் கைது செய்தது அவஸரப்பட்ட கார்யமாகும் ! இன்னும் வ்யக்தமான சட்ட மறுப்பு போன்ற செயலிலிறங்கும் போது செய்தால் அதிக எதிர்பிராது! கார்யக்கமிட்டியும் சிறிது ஜாக்கிரதையாயிருத்தல் நலம்.

சத்திரத்தில் பஞ்சமன் சமயல் !! சில தார்மிகர்கள் அன்னஸத்ர ஆலயம் போன்ற சிறந்தகர்மத்தைக் செய்து சென்றனர். அது குரங்கு கையில் பூமாலை சிக்கியது [illegible] மாயிற்று. திருவையார் ஸம்ஸ்கிருத கலாசாலையில் உத்தம பிராம்மணர்களுக்கிடமில்லை. போர்ட் ஸத்ரத்தில் சமயனுக்கு பஞ்சமனை நியமிக்க தீர்மானித்தது ?

என் செய்வது? தார்மிகர்களது முறையீடு அதிகாரிகள் செவியிலேறவில்லை! நாமும் சேர்ந்து ஓங்கி உறக்க செவிடுபடும்படி கூறவில்லை. ரயலடிகளில் பிராமணர் தண்ணி கொடுத்திருந்தனர். அதையும் இப்போது மாற்றி அன்யர் கொடுக்கின்றனர். சிஷ்டர்கள் சாப்பிடப் போவதில்லை என்ருலும் வருங்காலத்தை நினைத்தால் அச்சமுண்டாகிறது?

புதிய நிர்வாஹஸபையா ? வைச்ராய் எப்பாடுபட்டாவது இந்தியரும் நிர்வாஹ ஸபையில் இருக்கின்றனர் என்று உலகிற்குகாட்ட தீவ்ரமுயற்சி செய்கிருர். தேசிய ஸபை அவை ஏற்காவிடில் ஹிந்துமஹாஸபை முஸ்லீம்லீக் இரண்டையுங்கொண்டு மத்ய ஸபையையாவது நடத்த முயற்சிப்பார். யாருக்கு அதிருஷ்டமோ ?

ஸ்ரீ கர்க்க ஸம்ஹிதை பூர்த்தியும் சிவரஹஸ்ய ஆரம்பமும்

சென்ற மூன்று ஆண்டுகளாக ப்ரதிஸ்திர வாரத்திலும் சென்னை ஸ்ரீசங்கர மடத்தில் பிரும்மஸ்ரீ சோமதேவ சர்மா அவர்களால் உபந்யாசிக்கப்பட்டு வந்த ஷை இதிஹாஸம் 13உ மாலை பூர்த்தியாயிற்று. வழக்கபடி பக்தர்கள் உபன்யாஸகருக்கு தக்க ஸன்மானம் செய்தனர். உபன்யாஸகராலேயே ஸப்யருக்கு சர்க்கரை சந்தன தாம்பூலம் வழங்கப்பட்டது.

பிறகு அதே சமயத்தில் ஸ்ரீ சிவ ரஹஸ்யமெனும் இதிஹாஸம் ஸ்ரீ சர்மா அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு ப்ரதிஸ்திரவாரமும் நடைபெறும்!

ந. நி.

ஸந்தேஹம்!

12அம்சம் கொண்டது ஸ்ரீசிவ ரஹஸ்யம் சென்னை க. ஸதாசிவ செட்டியாரால் சிறிது பாகம் அச்சிடப்பட்டது! அச்சான அம்சமெவ்வளவு? அவை எங்கு கிடைக்கும்? அச்சாகாதவை எவரிடமேனு மிருந்து தெரிவித்தால் அச்சிட முயற்சிப்போம்.

ஓர். நிருபர்.

ஸ்ரீ லலிதா
ஸஹஸ்ர நாமம்
மூலம் நாகரத்திலும், தமிழிலும்,
ஸ்ரீமான் G. V. கணேசய்யர், B.A., B.L.
எழுதியது.
ஸ்ரீ வித்யை, ஸ்ரீ பாஸ்கரராயருடைய சரித்திரம், ந்ருஸிம்ஹாநந்தநாதர் பரிபாஷா ச்லோகங்கள் முதலியன அடங்கியவை
ஸ்ரீ அம்பாள், ஸ்ரீ பாஸ்கரராயர்,
ஸ்ரீ சக்ரம் படங்களுடன்கூடியது.
விலை ரூ 4] [தபால் V. P P. சிலவு தனி.

ஸ்ரீ குகதாஸ் S. V. நடராஜய்யர் பிரசுரங்கள்.

அத்யாத்மயோகம் அல்லது ஆத்மபயிற்சி ராப்பர்	2 8 0
கலிகோ	3 0 0
சுப்ரமண்ய ப்ரஸன்ன மாலா மந்த்ரம்	0 2 0
ஸ்ரீ நாரதபக்தி ஸூத்ரம்	0 12 0

கிடைக்குமிடம்:— ஸ்ரீ ஜனர்த்தன அச்சுகூடம், லிமிடெட்., கும்பகோணம்.

குழந்தைகளுக்கு வியாதி எல்லாம்
சேர்க்கை ஆஹாரத்தினல் தான்.
தாய்ப் பாலில் வளரும் குழந்தைக்கு
கட்டிமாந்தம் முதலிய நோய்கள் வாரா.
ஆயுர்வேதாசார்ய
V. B. நடராஜ சாஸ்திரீ அவர்களின்
பயஸ்யா
தாய்ப் பாலை அளவிலும் ஸாரத்திலும்
அபிவிருத்தி செய்யும் உத்தம ரஸாயனம்.
விலை ரூ 2—4—0 தான்.
எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்
அல்லது நேரில்
'ஆத்ரேய'
ஆயுர்வேதிக் ஒர்க்ஸ்,
தென்னூர் ரோடு, திருச்சிறைப்பள்ளி.
பயஸ்யா— புஸ்தகம் வேண்டுவோருக்கு இனமாய் அனுப்பப்படும்.

ஆலயப்பிரவேச துக்கதினம்.

காஞ்சீபுரம்

இத்தினமாகப்பட்டது காஞ்சீபுரம் ஸ்ரீ வரதராஜ ஸ்வாமி ஸன்னதி வீதியில் ஸ்ரீ ஆஞ்ஜனேயர் கோயிலுக்கருகில் ஜூலை மாதம் 8 தேதி மாலை பாராட்டப்பட்டது.

சாயந்திரம் ஸ்ரீ பார்த்தனுக்கு ஸாரத்யம் செய்யும் அவசரத்திலிருந்த ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவின் படம் பஜனை கோஷ்டியுடன் நான்கு மாடவீதிகள் வழியாக ஊர்வலமாகக்கொண்டு வரப்பட்டு கோஷ்டி ஸ்ரீ தேவராஜஸ்வாமி ஸன்னதி வீதியிலிருக்கும் ஸ்ரீ ஆஞ்ஜனேயர் ஸன்னிதிக்கு வந்து சேர்ந்ததும் பின்வரும் தீர்மானம் படிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

“இங்கு கூடியிருக்கும் ஆஸ்திக ஹிந்துக்களாகிய நாங்கள் இந்த மஹாயுத்தத்தில் நமது கவர்மெண்டுக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடியான நிலைமையையும், யுத்த ஸம்மந்தமாக நம்கடமையையும் உணர்ந்தும் இப்போது கவர்மெண்டுக்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்தான நிலைமைக்கு அது தர்மவிருத்தமான சாரதா விவாஹ சட்டம் ஆலயப்ரவேச சட்ட முதலிய பல சட்டங்களை காருண்யம் பொருந்திய குவீன் விக்டோரியா மஹாராணியாரும் அவருடைய பின் வந்த பல அரசர்களும் கொடுத்திருக்கும் மத விஷய பாதுகாப்பு, வாக்குறுதிகளுக்கு நேர் விரோதமாக, பாஸ் செய்வித்ததே காரண மென்றும் எங்கள் சாஸ்திர ஆதாரங்களைக் கொண்டும் பூர்வ சரித்திரங்களைக் கொண்டும் நம்புகிறோம்.

ஆகையால் அரசாங்கத்தார் இக்கணமே அத்தகைய அதர்மசட்டங்களை ரத்துசெய்து தர்மத்தை நிலைநாட்டும் பக்ஷத்தில் அத்தர்மமே இவ்வரசாங்கத்தை பல கஷ்டங்களிலிருந்து காப்பாற்றி வெற்றியையளிக்கும்

ராஜானம் தர்ம கோப்தாரம்
தர்மோ ரக்ஷதி ரக்ஷித:
வேந்தனுக்கு வெற்றி யுண்டாகுக.

(ந-நி)

வர்ணாச்ரம சுயராஜ்ய சங்கம் மதுரை

7-7-40தேதி ஆலயப்பிரவேசம் நடந்து 1 வருஷமாகி விட்டதால் அன்றைய தினம் தமிழ் சங்கம் ரோடு 55 நெ. பங்களாவில் பிரதிஷ்டை செய்திருக்கும் ஸ்ரீ பால மீனாம்பிகை சந்நிதியில் அனேக ஸ்திரீ ரத்னங்களும், ஆஸ்திகர்களும் குழந்தைகளும் இந்த அக்ரமம் ஒழியவேண்டும். என்ற எண்ணத்துடன் ஸ்ரீ பால மீனாம்பிகையை பிரார்தித்துக்கொண்டு உபவாஸம் இருந்தார்கள். மறுநாள் 8—7—40 தேதி ஸ்ரீபால மீனாம்பிகைக்கு அர்ச்சனை ஆரத்திகள் நடைபெற்று 5 மணிக்கு மௌன ஊர்வலம் புறப்பட்டு ஸ்ரீமீனாக்ஷி சுந்தரேஸ்வரானையும், குருவாயூர் ஸ்ரீ கிருஷ்ணனையும் புஷ்ப விமானத்தில் எழுந்தருளச் செய்து வடக்கு வெளி வீதி, தளவாய் அக்ரஹாரம் கீழாவணிமூலவீதி மேலாவணிமூல வீதி, மேலாவணிமூல வீதி, தெற்காவணிமூல வீதி, காவல்கூட தெரு, கிருஷ்ணராயர் தெப்பக்குளத்தெரு வழியாய் பவனி வந்து சுமார் 7 மணிக்கு திலகர் சதுக்கத்தில் ஓர்மாபெரும் கூட்டம் நடைபெற்றது. ஊர்வலத்தில் சுமார் 3000 ஜனங்கள் கலந்து கொண்டார்கள் இதுபோல் ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு டவுனிலும் துக்க தினமாக 8—7—40ல் நடத்தி இருப்பார்கள் என்று நம்புகிறேன்.

எஸ். சுந்தரராஜன்.

சிதம்பரம்

அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்க கார்யாத்யக்ஷகர் பிர்ம்மஸ்ரீ ராவ்சாகேப் என். நடேசய்யர் அவர்களது வேண்டுகோளுக்கிணங்கி, தென்னாற்காடு ஜில்லா வர்ணாச்ரமசங்கத்தின் சார்பாகவும், ஜில்லா பிராம்மண மஹா சபையின் சார்பாகவும் சிதம்பரம் கீழ ஸன்னதியில் ஓர் பொதுக் கூட்டம் நேற்று கூடியது. ஸ்ரீமான்கள் ஏ. பி. வெங்கடசுப்ரமணியதீக்ஷிதர், ஜில்லா சபை டிரஷரர், ராஜபாலசுப்ரமணிய ஜடாவல்லபர், ஜில்லா காரியதரிசி, முதலானோர்களும் வந்திருந்தார்கள். ஷை கூட்டத்தில் ஆலயப்பிரவேச துக்க தினம் கொண்டாடப்பட்டது. காங்கிரஸின் அசாஸ்த்ரீய நடவடிக்கைகளை கண்டித்தும், பிரிட்டிஷ் சேனைகளுக்கு வெற்றி கிடைக்க வேண்டியும், உலக சமாதானத்தை மீட்கவும், நமது சாஸ்த்ரீய பழக்க வழக்கங்களை யொட்டி கோவில்களில் பிரார்த்தனைகள் நடத்த உதவும்படி மதராஸ் ஆலயப்ரவேச 22/1939 சட்டத்தை நீக்கவேண்டுமென்றும் கவர்ன்மெண்டாரை வேண்டியும், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட பின்னர் கூட்டம் கலைவுற்றது.

[ந-நி]

திருவேடகம்

8—7—40-ல் நடந்த மீட்டிங் விபரம்

அகில இந்திய வர்ணாசிரம ஸ்வராஜ்ய ஸங்கம் தலைவரவர்களின் உத்திரவுப்படி 8—7—40ம் தேதி இரவு 7-மணிக்கு திருவேடகம் அம்மன் கோவிலில் சங்கமெம்பர்களும் பொது ஜனங்களுமுள்பட ஏராளமான பேர் விஜயம் செய்திருந்தனர். கூட்டத்திற்கு ஷையூர் ஜோஸ்யம் பிரம்மஸ்ரீ நரசிம்மய்யங்கார் அவர்கள் அக்ராசனாதிபதியாயும் ஷையூர் வேதசாஸ்திர பாடசாலை உபாத்தியாயர் பிரம்மஸ்ரீ கிருஷ்ணசாமி கனபாடிகள் காரியதரிசியாயுமிருந்து ஷை சபையில் ஆலயப்ரவேச துக்கதினம் கொண்டாடப்பட்டது. அடியில்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு சுவாமி பிரார்த்தனையும் நடைபெற்றது.

சபையோர்கள் பிரேரேபனையின் பேரில் ஷையூர் பிரம்மஸ்ரீ நாகேசுவர சர்மா அவர்கள் செய்த சொற்பொழிவின் சுருக்கமாவது:—

சென்ற 1939-ம் வருஷம் ஜூலை மாதம் இதே தேதியில் சர்வலோக மாதாவாயும் தர்சன மாத்திரத்தில் அநாயாஸமாக மோக்ஷ புருஷார்த்தத்தைக் கொடுக்கக் கூடியதாயும் பிரம்ம வித்யா சொரூபிணியாயும் இருக்கிற மதுரை ஸ்ரீ மீனாக்ஷி தேவியின் ஆலயத்தில் சீர்திருத்தக்காரர்கள் என்று பெயர் வைத்துக் கொண்டு காங்கிரஸ்காரர்கள் பஞ்சமர் முதலான தீண்டாத ஜாதியார்களைப் பிரவேசிக்கச் செய்து தெய்வ சான்னித்தைக் கெடுத்து விட்டதிலிருந்து வருஷகாலமாக ஷை அம்பாளுடைய தெரிசனம் நமக்குக் கிடைக்காமல் தாயை இழந்த குழந்தைகள் போல் பரிதபித்துக் கொண்டிருக்கிறோம். அதற்காக எவ்வளவோ பிரயத்தனங்கள் நடை பெற்றும் இன்னும் விமோசனம் பிறக்கவில்லை இனிமேலாவது விமோசனம் ஏற்பட்டு மீனாக்ஷி தெரிசனம் கிடைக்கவேண்டும் என்பதாக எல்லோரும் ஈடுபட்டு சர்வ வல்லமையுள்ள ஈஸ்வரனைப் பிரார்த்திக்க வேண்டுமென்றும் காங்கிரஸ்காரர்கள் செய்த அதர்மச் செய்கைகளால் இப்போது நமது பிரிட்டிஷ் ராஜாங்கத்திற்கு வந்திருக்கிற ஆபத்தானது விலகவேண்டுமென்றும் நடக்கும் யுத்தத்தில் நமது ராஜாவிற்கு ஜயம் கிடைக்கவேண்டுமென்றும். இவ்வூரில் சனாதன பள்ளிக்கூடம் ஒன்று ஏற்படுத்தி குழந்தைகளுக்கு மதப்படிப்பைச் சொல்லிக் கொடுக்கவேண்டுமென்றும் இனி வரப்போகிற எலக்ஷனில் காங்கிரஸ்காரர்களுக்கு எந்தக் காரணத்தை முன்னிட்டும் ஓட்டுக்கொடுக்கக் கூடாதென்றும் மிக அழகாயும் உருக்கமாயும் சிறந்த உதாரணங்களுடனும் எடுத்துக் காட்டி விரிவாக உபன்யசித்தார்கள்.

(பின்பு அடியில்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு எல்லா ஜனங்களும் கோவிலுக்குள் சென்று சுவாமி ஏடகநாதருக்கு அபிஷேகம் அர்ச்சனை முதலியன நடத்தி பிரார்த்தனை செய்யப்பட்டது.)

தீர்மானங்கள் விபரம்

மதுரை மீனாக்ஷி சுந்தரேஸ்வராள் கோவிலுக்கு ஏற்பட்டிருக்கிற அசுத்தியானது நிவர்த்தியாகி மஹாகும்பாபிஷேகம் நடைபெற்று பிறகு அம்பாளுடைய தெரிசனம் கூடிய சீக்கிரத்தில் கிடைக்கவேண்டுமென்று சகல ஜனங்களும் தினந்தோறும் ஈசுவரனை வழிபாடுகள் செய்து பிரார்த்திக்க வேண்டும்.

இப்போது இங்கிலாந்து தேசத்தில் நடக்கும் யுத்தத்தில் நம் ராஜாவுக்கு ஜயம் கிடைக்க வேண்டுமென கடவுளைப் பிரார்த்திக்க வேண்டும். ராஜாங்கத்துக்குக் குறைவான வார்த்தைகளை வியவகரிக்கக் கூடாது. நம் ராஜாவுக்கே ஜயம் கிடைக்கும் என்ற நிச்சயத்துடனும் தைரியத்துடனுமிருக்க வேண்டும்.

இவ்வூரில் சனாதன பள்ளிக்கூடம் ஒன்று ஏற்படுத்தி மதுரை சனாதன தர்மவித்யா சாலையில் நடக்கும் பாடதிட்டப்படி குழந்தைகளுக்கு போதிக்கச் செய்யவேண்டும்

வரப்போகும் எலக்ஷனில் அநீதிக்காரர்களான காங்கிரஸ்காரர்களுக்கு எக்காரணத்தை முன்னிட்டும் ஓட்டுக் கொடுக்கக் கூடாது.

தலைவர் முடிவுரைக்குப்பின் பலத்தகர கோஷத்துடன் எல்லாஜனங்களும் ஷை தீர்மானங்களை ஏகமனதாக ஆதரித்து வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

(ந. நி.)

மன்னார்குடி

மன்னார்குடி வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தின் ஆதரவின்கீழ் 8—7—40ல் மதுரை அழகர்கோவில், பழனி முதலிய இடங்களில் ஹரிஜன ஆலயப்பிரவேசம் நடந்தது பற்றி அநுதாப தினம் கொண்டாடப்பட்டது. மன்னார்குடி ஸ்ரீராஜகோபாலஸ்வாமி, செங்கமலத்தாயார் சந்நதிகளில் ஸ்ரீஉ. வே. சக்ரபாணிதீக்ஷிதர் சுவாமியால்க்ஷேமசூசகமாக ஸஹஸ்ரநாமார்ச்சனை நைவேத்யங்கள் நடத்தப்பெற்றும், மாலை ஸஹஸ்ரநாம கோஷ்டி வலம் வந்தும், மாலை 7 மணிக்கு ஸ்ரீ அகோபில மடத்து வாயிலில் ஷை தேவஸ்தானம் ஸ்தானீகம் ஸ்ரீ உ. வே. ராஜகோபால தீக்ஷிதர் அவர்கள் தலைமையின் கீழ் ஓர் பொதுக் கூட்டமும் நடைபெற்றது. கூட்டத்தில் நேஷனல் ஹைஸ்கூல் பண்டிட் சிரோமணி சிவராம சாஸ்திரிகளும், குறிச்சி வித்வான் ஸ்ரீ உ. வே ராமபத்ராசார்சுவாமியும், சேரங்குளம்வித்வான் ஸ்ரீ உ. வே. கோபாலய்யங்கார் ஸ்வாமியும், மதுரை முதலிய தேவாலயங்களில் ஹரிஜனங்களை ஆலயப்பிரவேசம்

(தொடர்ச்சி 3 பக்கம் பார்க்க)

ஆலயப்பிரவேச துக்க தினம்.

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

செய்ததைக் கண்டித்தும், அதனல் நமது மதத்துக்கு உண்டாகும் தீங்கையும், அரசாங்கத்தார் மத விஷயங்களில் தலையிடுவது தகாதென்றும், ஆலயப்பிரவேச சட்டத்தை ரத்து செய்யவேண்டுமென்றும் பேசினர்கள்.

குறுக்கை தமிழ்ப்புலவர் திருவாளர் மீனுக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்கள் ஆஸ்திகம் என்பது பற்றியும், அவரவர்கள் தம் தம வர்ணுச்ரம தர்மத்தை அனுஷ்டிக்கவேண்டிய அவச்யத்தைப்பற்றியும், ஆலயவழிபாடுகளில் யார்யார் எவ்விதம் வழிபாடு செய்யவேண்டுமென்று விதிக்கப்பட்டுள்ளதோ அந்த வரம்புமீறி யாரும் பிரவேசிக்கக்கூடாதென்றும் எடுத்துரைத்தார். பிறகு தலைவர் ஹரிஜன ஆலயப்பிரவேசமானது ஆகம சாஸ்திரங்களுக்கு புறம்பானது என்றும் அதனல் ஆலய வழிபாட்டிற்கு பெருங்கெடுதி ஏற்பட்டிருக்கிறதென்றும் கூற வந்தனுேபசாரத்துடன் கூட்டம் கலைந்தது.

ஷ சங்கத்தலைவர் ரிடயர்ட் சப் ஜட்ஜ் ஸ்ரீ உ. வே. ஸ்ரீனிவாஸய்யங்கார் அவர்களால் கீழ்கண்ட தீர்மானங்கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. தற்காலம் நடைபெறும் யுத்தத்தில் மாக்ஷிமை தங்கிய மன்னர்பிரானுக்கு வெற்றி யுண்டாக எல்லோரும் பிரார்த்தனை செய்யவேண்டுமென்றும் ஹரிஜன ஆலயப்பிரவேச சட்டத்தை ரத்து செய்ய வேண்டு மென்றும் இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது."

தமிழ்ப்புலவர் திருவாளர் மீனுக்ஷிசுந்தரம் பிள்ளையார் உபன்யாசம் ஸநாதனிகளின் கூட்டத்திற்குரொம்பவும் ஏற்றது. ஷ யார் விலாசம்தமிழ்ப்புலவர்மீனுக்ஷிசுந்தரம்பிள்ளை கொர்க்கை திருத்துரைப்பூண்டி தாலுக்கா.

ஆர். சந்தானகிருஷ்ணன்

இராமேஸ்வரம்

மதறுஸ் பிராந்திய வர்ணுசிரம ஸ்வராஜ்ய சங்கத்தலைவர் ஸ்ரீமான் என். நடேசய்யர் அவர்கள் வேண்டுகோளின்படி 8-7-39 தேதி மதுரை ஸ்ரீ மீனுக்ஷி தேவாலயத்திலும் மற்றுமுள்ள தேவாலயங்களிலும் சாஸ்திரங்களுக்கும் நீண்டகால பழக்க வழக்கங்களுக்கும் விரோதமாக நடந்த தீண்டாதார் ஆலயப்ரவேசம் செய்ததைக் கண்டிக்கும் பொருட்டு ஷ சங்கத்தினதரவில் இவ்வூர் பஞ்சாயத்துக் கோர்ட்டு மெம்பரும் இச்சக்க அங்கத்தினருமான ஸ்ரீ வயி. ராமனதை வாத்தியார் அவர்கள் தலைமையில் 8-7-40 தேதி மாலை 6-மணிக்கு ஷ சங்கக் காரியாலயத்திலிருந்து ஓர் மௌன ஊர்வலம் புறப்பட்டு மாலை 7 மணிக்கு சங்கக் காரியாலயம் வந்து சேர்ந்தது. ஊர்வல மத்தியில் ஸ்ரீ ராமனதாலயத்தின் கீழ் வாசல் முன்பாக அக்கிரம ஆலயப்ரவேசச் சட்டம் ரத்தாகவேண்டு மென்றும் இப்பொழுது நடக்கும் மஹா யுத்தத்தில் நமது அரசருக்கு வெற்றி கிடைக்க வேண்டு மென்றும் பிரார்த்திக்கப் பட்டது.

பொதுக் கூட்டம்

ஷ ஊர்வலம் முடிந்த பின்னர் சரியாக இரவு 8 மணிக்கு ஸ்ரீமான் பஞ்சாயத்துக் கோர்ட்டு மெம்பர் ஸ்ரீ வயி. ராமனதை வாத்தியார் அவர்கள் அக்கிராஸனத்தின் கீழ் ஓர் ஆலயப்ரவேசத்தின் எதிர்ப்பு கூட்டம் ஷ சங்கக் காரியாலத்தில் நடைபெற்றது அவ்வமயம் ஷ சங்கத் தலைவர் ஸ்ரீ மு. வ. கோபால சாஸ்திரிகள் இக்கூட்டம் கூட்டப் பட்டதின் காரணத்தையும் சங்கத்தின் நோக்கங்களையும் சென்னை மாஜி மந்திரிகள் கோஷ்டியாரால் தீண்டாதார்களை அக்கிரமமாக ஆலயப்ரவேசம் செய்வித்ததும் பின்பு தொடரா தொழிச்சம் செய்ததையும் விபரமாக எடுத்துச் சொல்லிகண்டிக்கப்பட்டது. மேலும் பேசுகையில் ஷ சட்டத்தைக் களைந்தெறிய மக்களும் குறிப்பாக வாலிபர்களும் முயற்சி யெடுத்துக் கொள்ள வேண்டு மென்று கேட்டுக் கொண்டார். பின்னர் இவ்வூர் ஸ்ரீ பண்டிட் நாராயண சாஸ்திரிகளும் ஸனதன தர்மத்தின் பெருமையையும் அதை முன்னேர்கள் அனுஷ்டித்து வந்ததையும் அதனல் ஏற்பட்ட சௌகரியங்களையும் பற்றி அனுபவ பூர்வமானதும் சாஸ்திர ஆராய்ச்சியுடன் கூடியதும் அனேக விஷயங்களை எடுத்து கூறியபின் சபை மெம்பர் வி. நடராஜ சர்மாவால் வடமொழியில் தயாரித்த அனுதாப பத்திரம் வாசித்துக் கொடுக்கப் பட்டது. ஷ பத்திரத்தை சங்க மெம்பர், ஆர். நாகஸஞ்சீவி ராமன் அவர்களால் தமிழில் மொழி பெயர்த்து சொல்லப் பட்டபின் அடியில் கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறியது.

தீர்மானங்கள்

சென்ற 8—7—40-ல் மதுரை ஸ்ரீமீனுக்ஷி தேவஸ்தானம் முதலிய தேவாலயங்களில் சாஸ்திரத்திற்கும் பழக்கத்திற்கும் விரோதமாகவும் திருட்டுத்தனமாகவும் நடந்த ஆலயப்ரவேசத்தை இக்கூட்டம் உணர்ச்சியுடனும் ஏகமனதாக கண்டிக்கிறது.

ஷ திருட்டுத்தனமாகவும சட்டத்திற்கு விரோதமாக ஆலயபிரவேசம் செய்தவர்கள், அதற்கு உடந்தையாக இருந்தவர்கள் பேரில் தாவா தொடராதிருக்கும் பொருட்டு அக்கிரமமாகவும் நியாய விரோதமாகவும் ஆலயப்ரவேச தொடரா தொழிச்சட்டமும் அதன் பாதுகாப்புமென்ற சட்டத்தை செய்த சென்னை மாகாண காங்கிரஸ் மாஜி மந்திரி சி. ராஜகோபாலாசாரி கோஷ்டியார்களையும் அதற்கு உதவி அளித்த ரெலிஜியஸ் எண்டோமெண்டு போர்டார் முதலியவைகளையும் இக்கூட்டம் ஆத்திரத்துடன் கண்டிக்கிறது.

மேன்மை மிக்க ஹிந்து மதத்தையும் அதன் ஜீவாதார உரிமைகளையும் அதன் மத கோட்பாடுகளையும் நாசம் செய்யும் நோக்கத்துடன் சிருஷ்டிக்கப் பட்டதும் மகா பயங்கரமானதுமான ஆலயபிரவேச தொடரா தொழிச் சட்டத்தை ரத்து செய்து மேன்மை தாங்கிய விக்டோரியா மகாராணி அவர்களால் பிரகடனம் செய்யபட்ட மதபாதுகாப்பு பிரகடனத்தின்படி மதத்தை பாதுகாக்க வேணுமாய் காருண்யமுள்ள பிரிடிஷ் கெவர்மெண்டார் அவர்களையும் மே. த. கவர்னல் ஜெனரல் அவர்களையும் இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

நியாயத்தையும் தர்மத்தையும் கருதி நடைபெறும் கோரயுத்தத்தில் நமது பிரிட்டிஷ் மன்னர்பிரானுக்கு பூர்ணவெற்றி கிடைக்க வேணுமாய் தீர்மானித்து ஸ்ரீராமனதை சுவாமியை பிராத்தனை செய்தது. வந்தனுேபசாரத்துடன் கூட்டம் கலைந்தது.

கோடிலிங்கம் சங்கர சாஸ்திரிகள்.

பரமந்தூர்

8—7—40 மீடிங் அ. இ. வ. சு. ஸங்க அத்யக்ஷகர் ஸ்ரீமான் என். நடேசய்யர் விடுத்த வேண்டுகோளுக்கிணங்கி ஷ இக்கிளை சங்கத்தின் தலைவர் ஸ்ரீமான் கே. எஸ். சுந்தரேசய்யர் அவர்கள் தலைமையில் இன்று தினத்தை ஆலயப்பிரவேச துக்க தினமாக கொண்டாடப்பட்டது.

இன்று மாலை 4 மணிக்கு கூட்டம் ஷ யூர் ஆதிகேசவப் பெருமாள் கோவில் வாசலிலிருந்து புறப்பட்டு மௌனமாக நான்கு ரதவீதிகளையும் சுற்றி வந்து ஷ கோவிலுக்குள் சென்று காங்கிரஸ்காரர்கள் மத ஸம்பந்தமாய் செய்து இருக்கும் அட்டூழியங்களுக்கு விமோசனம் கிடைக்க வேணுமாய் பிரார்த்தனை செய்யப்பட்டது.

அதன்மேல் நடந்த ஸங்க கூட்டத்தில் ஸ்ரீமான் டி. கே. சுப்பிரமணியய்யர் காங்கிரஸ்காரர்கள் நம்மை ஏமாற்றி நம்மிடம் ஓட்டுக்களை வாங்கிக்கொண்டு கடைசியாக நம்முடைய ஸம்மதமன்னியில் நம்முடைய மத விஷயங்களில் தலையிட்டு சனதன தர்மத்தை சீர்கேடுபடுத்தி யிருப்பதைப்பற்றி தெளிவாய் எடுத்துப்பேசினர். அதன்பேரில் அடியிற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

காங்கிரஸ்காரர்கள் மத ஸம்பந்தங்களில் குறுகிட்டு அக்கிரமங்கள் செய்வதை இச்சங்கம் பலமாய் கண்டிக்கிறது. சென்னை ஆலயப்பிரவேச சட்டத்தை ரத்து செய்ய வேணுமாய் மே. த. கவர்ன்மெண்டு அதிகாரிகளை ரொம்பவும் கேட்டுக் கொள்ளுகிறது. அதன் பிறகு தலைவர் வந்தனுேபசாரம் கூற கூட்டம் இனிது முடிந்தது.

பி. வி. ஸ்ரீனிவாஸபட்டாசாரியார்.

மேல்மங்கலம்

மதுரை ஜில்லா பெரியகுளம் தாலூகா மேல்மங்கலம் கிராமம் மஹா ஜனங்கள் விக்ரம ௵ ஆனிமீ 25௳ (8—7—40) ஸோம வாரம் பகல் 11 மணிக்கு அமைதியுடன் ஊர்வலமாக இவ்வூர் ஸ்ரீ மீனுக்ஷி சுந்தரேஸ்வரர்கோவிலுக்குச்சென்று ஸ்வாமி அம்மன் இருவர்களுக்கும் அபிஷேகம் செய்வித்து யுத்தத்தில் நமது மாக்ஷிமை தங்கிய பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாருக்குப் பூர்ண வெற்றி கிடைக்கவேண்டுமென்றும் பிரார்த்தனை செய்தார்கள்.

அன்று பிற்பகல் 3-மணிக்கு ஒரு கூட்டம் கூடி மகா-ா-ஸ்ரீ விஸ்வநாத அய்யரவர்களின் அக்கிராஸனத்தின்கீழ் அடியிற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பெற்றன.

(1) மேன்மை தங்கிய அதிகாரிகளான H. E ராஜப்பிரதிநிதி அவர்களையும், சென்னை கவர்னர் அவர்களையும், ஆலயப்பிரவேசச் சட்டம் (Act 22 of 1939) மேலும் தொன்று தொட்டு வருகின்றனவான மதவழக்கங்களுக்கு மாருன சட்டங்கள் இவைகளை ரத்து செய்ய வேண்டு மென்று இந்தக்கூட்டத்தார் பிரார்த்திக்கிருர்கள்.

பிரேரகர் மகா-ா-ாஸ்ரீ சிவருமசிரௌதிகள் அவர்கள் ஆமோதகர் மகா-ா-ாஸ்ரீ தக்ஷிணுமூர்த்தி சாஸ்திரிகள் அவர்கள் ஆதரித்தவர் மகா-ா-ாஸ்ரீ ஸ்ரீ ராமகிருஷ்ணய்யரவர்கள். தீர்மானம் ஏகமனதாக ஒத்துக்கொள்ளப் பெற்றது.

ஷ தீர்மானங்களின் நகல்களை மேன்மை தங்கிய எச். இ. ராஜப்பிரதிநிதி அவர்களுக்கும்மேன்மைதங்கிய எச். இ சென்னை கவர்னர் அவர்களுக்கும் அனுப்பவேண்டு மென்று அக்ராஸனதிபதிஅவர்கள்பிரேரணை செய்து கூட்டத்தில் எல்லோராலும் அங்கிகரிக்கப்பெற்றது.

பின்னர் ஸ்ரீ வி. எஸ். ராமசாமி சாஸ்திரிகள் பி. ஏ. பி. எல். அவர்களால் அக்ராசனர் முதலியோருக்கு வந்தனம் கூறப்பெற்று சபை மாலை 4½ மணிக்கு இனிது நிறைவேறியது. சிவருமகணபதி கனபாடிகள்

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்ய தர்மம்

விக்ரம-வரு ஆடி-மீ 3உ

காந்தீயத்தின் வீழ்ச்சி

கால சக்ரம் வேகமாகச் சுழன்றுகொண்டிருக்கிறது. அதனால் உலக வாழ்க்கையில் ஏற்றதாழ்வுகளும் மாறுதல்களும் துரிதமாக ஏற்பட்டுவருகின்றன. "காங்கிரஸே காந்தி' "காந்தியே காங்கிரஸ்" என்று மிகுந்த அபேதமாகப் பேசப்பட்டு வந்ததிலேயே இன்று பெரிய மாறுதல் ஏற்பட்டுவிட்டது. காந்திஜி ஆக்ஞையை அணுமாத்திரமும் தாண்டாதவர்களும், புதிய காந்தீயத்தால் தான் இந்தியா புத்துயிர் பெற்று முன்னேறக்கூடுமென்று நம்பியும், பேசியும் வந்த காந்தி சிஷ்யர்களே அவருடைய கொள்கைகளை இன்று ஏற்க மறுத்து விட்டது பெரிய ஸம்பவமல்லவா? வார்தா கார்யக்கமிட்டிக் கூட்டத்தில் தமது சீடர்கள் தமது வார்த்தைக்கு மதிப்புகொடாமலும், தம்மை உதறியடித்தும், தங்களிஷ்டப்படி தீர்மானம் செய்தவிவரத்தைப்பற்றி காந்திஜி 8உயன்று விவரமாக ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார். அதை ஊன்றிப்படித்தால் காந்திஜியின் ஏமாற்றமும், வருத்தமும் நன்கு வெளிப்படுவதுடன் காங்கிரஸை விட்டு காந்தீயம் விரட்டப்பட்ட விவரமும் ஸ்பஷ்டமாகிறது. வழக்கம்போல் அஹிம்ஸையை அடிப்படையாகக் கொண்ட ஒரு தீர்மானத்தை ஸ்ரீமான் காந்தி தயாரித்துக் கொடுத்தார். ஆனால் அதற்குப் போட்டியாக ஸ்ரீமான் ராஜகோபாலாசாரியரே மற்றொருதீர்மானத்தைத் தயாரித்தார். இதில் அஹிம்ஸைக் கொள்கையை தள்ளிவிட்டு அவச்யமான ஸந்தர்ப்பங்களில் ஹிம்ஸையையும் ஆதரிப்பதான கொள்கையிருந்தது. ஸி. ஆர். தீர்மானத்தையே பெரும்பாலோரான கார்யக்கமிட்டி மெம்பர்கள் ஆதரித்தார்கள். அதுவே நிறைவேறியது. கார்யகமிட்டியில் இதுவரையில் அபிப்பிராயபேதம் தோன்றுவதோ, அதையனுஸரித்து வோட்டு எடுப்பதோ வழக்கமில்லையாம். அவ்வளவு ஒற்றுமையுடனிருந்த அந்த ஸ்தாபனத்தில் அஹிம்ஸை விஷயமாக பலமான அபிப்பிராயபேதமேற்பட்டு வோட்டு எடுக்கவும், அது மெஜாரிடியில் நிறைவேறவும் நேர்ந்தது பெரிய ஆச்சர்யமென்று காந்திஜி தம் அறிக்கையில் கூறுகிறார்.

இம்மட்டுமா? காந்திஜியுடன் மேற்படி தீர்மான விஷயமாக விவாதம் நடந்த காலத்தில் ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாசாரியார் காந்தியை பரிஹாஸமாகப் பேசினதாயும் தெரிகிறது. "தங்களுடைய அதியான சிந்தனை காரணமாக தங்களது யோசனை சக்தி மலினமடைந்து விட்டது." என்று அவர் காந்திஜியைச் சொன்னதாக காந்தியே எழுதுகிறார். கடைசியாக காந்தி தீர்மானம் தள்ளப்பட்டு, ஸி. ஆர். தீர்மானமே காங்கிரஸ் தீர்மானமாக மதிக்கக்கூடியபடி நிறைவேறி விட்டது. ஆதலால் தாம் நிச்சயம் தோற்று விட்டதாயும், தமது கொள்கை காங்கிரஸிலிருந்து விலக்கப்பட்டு விட்டதாயும் காந்திஜீ நிச்சயமாக முடிவு கட்டுகிறார். அஹிம்ஸை போன்ற மத சம்பந்தமான விஷயங்களையெல்லாம் ராஜீயத்தில் தாம் சம்பந்தப்படுத்தி வந்ததை ஆக்ஷேபித்தவர்களுக்கு இப்போதிய நிலைமையானது மிகுந்த திருப்தியைத் தருமென்றும் காந்திஜி எழுதுகிறார்.

காந்திஜியின் அநுபவமற்ற ஹிம்ஸைக் கொள்கையை கடைபிடித்து வழி தவறி நின்ற காங்கிரஸானது ஸரியான வழிக்கு திரும்ப இவ்வளவு காலமாகியது. ஸ்ரீயுத திலகர் வெகு காலத்திற்கு முன்பே ராஜீயத்தில் அஹிம்ஸையைப் புகுத்துவதை பலமாக ஆக்ஷேபித்தார். அது அனுபவ ஸாத்யமல்லவென்றும் எதிர்த்தார். ஆயினும் இவ்வளவு கால அநுபவத்திற்குப் பிறகாவது தீரான திலகருடைய கொள்கையே சிறந்ததென காந்தி சீடர்களே கண்டுகொள்ள நேர்ந்தது விசேஷமானது. காந்திஜி தமது அறிக்கையில் வெகு சமத்காரமாகத் தமது தோல்வியை வெளியிடவும், சிலவிடங்களில் மறைக்கவும் முயன்றிருந்த போதிலும் முக்ய விஷயத்தை அவர் ஒப்புக்கொள்ள வேண்டி வந்து விட்டது. கார்யக்கமிட்டி முடிவிலிருந்து அநேக பிரச்சனைகள் எழக்கூடும். அவையெல்லாம் ஒரு புறமிருக்க, எது ஸத்யமோ, எது ஸாத்யமோ, எது சாஸ்திரீயமோ, எது அநுபவத்திற்கு ஏற்றதோ அதுவே வெற்றி அடைந்து விட்டது. காந்தியின் யோஜனை சக்தி மலினமடைந்து விட்டதென்பது ஒப்புக்கொள்ளப்பட்டுவிட்டது. கார்யக்கமிட்டியானது காந்தி தீர்மானத்தைப்புறக்கணித்து ஸி ஆர். தீர்மானத்தை ஏற்றதிலிருந்து இது நன்கு வெளியாகுமல்லவா? காந்திஜியின் யோஜனை சக்தி அழிந்து விட்டதாக ஸி. ஆர். காரணம் சொன்னாரன்றோ? மேலும், தீர்க்காலோசனையுடனும், வியவஸ்தையுடனும், தீர்மானிக்கவேண்டிய விஷயங்களில் க்ஷத்திரிய, வைச்ய, புத்தியைவிட பிராம்மண புத்தியே முதன்மையாயிருக்கக்கூடியதென்ற நீண்ட கால தத்வமும் இச்சம்பவத்தால் உறுதிப்பட நேர்ந்தது விசேஷமேயாகும்.

மேலும் முக்ய விஷயமொன்று. காந்திஜியின் பரமாந்தரங்க சிஷ்யரான ராஜாஜியே காந்திக்கு எதிராக நின்றார். அவர் மந்திரியாக இருந்த போது போலீஸ்படை, ராணுவம், கோர்ட், தண்டனை போன்ற ஹிம்ஸைகளின் உதவியைக் கொண்டே ஆக்ஷி நடத்தினர். இதற்காக பலரால் ஏசப்பட்டார். ஹிம்ஸையின்றி ராஜ்யம் நடக்காதென்பதை அநுபவத்தில் அறிந்தார். அதனாலேயே கார்யக்கமிட்டியில் அஹிம்ஸையை எதிர்த்து ஜயம் பெற்றார். ஆகவே இனி காங்கிரஸானது காந்தீயத் தீமையிலிருந்து விடுபட்டு சுத்தராஜீய ஸபையாக விருக்க நியாயமுண்டு. தார்மிகர்களும் மற்ற ராஜீயக் கக்ஷிகளும் வெகு காலம் முன்பாகவே கூறி வந்த உண்மையை காங்கிரஸ் இன்றுதான் அறிந்து கொள்ள முடிந்தது

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்வாமிகளின் வியாஸ பூஜை.

துவரங்குரிச்சியில் நடைபெறும்

கும்பகோணம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகளவர்களின் இவ்வருஷத்திய சாதுர்மாஸ்ய, வியாஸ பூஜா மஹோத்ஸவங்கள் தஞ்சாவூர்ஜில்லா பட்டுக்கோட்டைக்கு ஸமீபமாடள்ள துவரங்குரிச்சிஎன்ற கிராமத்தில் ஆடிமீ 4உ வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பமாகும்.

ஷை கிராமமானது பட்டுக்கோட்டை ரயில்வே ஸ்டேஷனிலிருந்து நான்கு மைல் தூரத்தில் உள்ளது. பஸ் ஸௌகர்யமும் உண்டு. யாவரும் மேற்படி வைபவங்களுக்கு வந்திருந்து ஸ்ரீ ஆசார்யாளுடைய அநுக்ரஹத்தைப்பெற்று கிருதார்த்தர்களாக வேண்டுமென்று அறிவிக்கப்படுகிறது.

பம்பாய் மதுவிலக்கு நிலைமை

ஸமஷ்டிக்கு அப்பீல்

வரி விதிப்புயோஜனை

பம்பாய் ஹைகோர்ட்டு தீர்ப்புக் காரணமாக மதுவிலக்குத்திட்டம் முறிந்து விட்டதைப் பற்றி அந்த கவர்ன்மெண்டார் யோஜனை செய்து ஸமஷ்டி கோர்டுக்கு அப்பீல் செய்வதாக முடிவு செய்திருக்கிறார்கள். அது வரையில் கள், சாராயக்குடி அதிகரிக்காமல் தடுக்க ஷை இரண்டு சரக்குகளுக்கும் புதிய வரி விதிக்கவும் யோஜித்து வருகிறார்கள்.

மதுவிலக்கு கமிட்டியிலிருந்து காங்கிரஸ் காரர்கள் விலகிவிட்டனர்,

மதுவிலக்கு விஷயமாக பலமான சட்டமொன்றை சட்ட ஸபை மூலம் இயற்றும் வரையில் தாங்கள் ஒன்றும் செய்வதற்கு இல்லையென்று கவர்ன்மெண்டார் ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார்கள்.

ஒரிஸாவில் மந்திரி ஆக்ஷி!

காங்கிரஸ்காரர்களுள் பிளவு?

காங்கிரஸ் கார்யக்கமிட்டியின் உத்திரவுபடி ஒரிஸா மாகாண மந்திரிகள் ராஜிநாமா செய்ததும், அங்கு 93வது பிரிவுப்படி ஆக்ஷி நடப்பதும் தெரிந்த விஷயம்.

இப்போது அங்கு காங்கிரஸ்காரர்களுக்குள் ஏற்பட்ட பிளவு காரணமாக அனேக காங்கிரஸ் சட்டஸபைமெம்பர்கள் சேர்ந்து மந்திரி ஆக்ஷியை ஆரம்பிக்க முயற்சிசெய்து வருகிறார்கள். இதரக்கக்ஷிகளின் உதவி கொண்டு ஒரு கலப்பு மந்திரி ஸபை அமைக்கப்படுமாம். அதில் காங்கிரஸ்காரர்களும் மந்திரி பதவி ஏற்பார்களாம்.

கக்ஷித்தலைவர்கள் கவர்னரைக்கண்டுபேசி வருவதாயும் சீக்கிரத்தில் மந்திரிஸபை அமைக்கப்பட்டுவிடு மென்றும் சொல்லப்படுகிறது.

ஸ்திரீகளின் பயமுறுத்தல் ஸத்யாக்ரஹம் ஆரம்பிப்பார்களாம்.

டேராடூனில் நடந்த அகில இந்திய ஸ்திரீ ஸங்கக்கூட்டத்தில் ஓர் முக்யமான தீர்மானம் செய்யப்பட்டதாம். அதாவது:—

"புருஷர்களுக்கு ஸமமான உரிமைகளை ஸ்திரீகள் கோருவதைப்பற்றி புருஷர்கள் அலக்ஷ்யமாயிருக்கிறார்கள். பரிஹாஸமும் செய்கிறார்கள். இனியும் இம்மாதிரி நடக்குமானால் ஸ்திரீகள் இந்தியாவெங்கும் ஏககாலத்தில் ஸத்யாக்ரஹம் செய்ய முற்படுவார்கள்"

"அடிமைப்பட இசைந்த பிரெஞ்சுக்காரர்கள்"

மிக இழிவான சமாதானம்.

துருக்கியப் பத்திரிகைகளின் அபிப்பிராயம்.

துருக்கியப் பத்திரிகைகள் தற்போதை பிரெஞ்சு சர்க்காரையும் பலமாகக் கண்டிப்பதாக ஆங்காராவிலிருந்து வந்த தந்தி ஒன்று கூறுகிறது.

"லியோபோல்ட் அரசரை இடித்துகாட்டி முழக்கிய பாரிஸ் ரேடியோவுக்கும், பிரெஞ்சுசர்க்கார் நடத்தைக்கு சமாதானம் கூறி அழுகிற போர்டோ ரேடியோவுக்கும் எவ்வளவு வித்யாசம்! என்ன பரிதாபமான வீழ்ச்சி!" உலுஸ் என்ற பத்திரிகை ஜுன் 24வ எழுதியது.

சிநேக பாவம் கொண்ட நாடுகளில் பிரெஞ்சு சமாதானம் பற்றி கேள்விப்படவும் உண்டான ஆச்சரியத்தைப் பற்றி "யேனிசபா" என்ற பத்திரிகை குறிப்பிடுகிறது.

"உலகம் முழுவதும் அன்புடன் போற்றும் பிரான்ஸ் இந்த நிபந்தனைகளை ஏற்கும் என்று யாருமே எதிர்பார்க்கவில்லை. இத்தகைய நிபந்தனைகளை பிரான்ஸ் காதுகொடுத்துக்கேட்கும் என்று சொல்லக்கூட எல்லாரும் கூசினார்கள். ஆனால், பிரான்ஸின் பிரதிநிதித்துவம் பெற்றிருப்பதாகச் சொல்லிக்கொள்ளும் ஒரு சர்க்கார் இவைகளை ஒப்புக்கொண்டு விட்டனர், இந்த நிபந்தனைகள் பிரான்ஸை, பெல்ஜியத்தைப்போல, சுதந்திரமும் சுயேச்சையுமற்ற நாடாகச் செய்துவிடும். அதன் பயனாய், பிரான்ஸ் ஜெர்மனிக்கு சேவகம் செய்யும். லக்ஷக் கணக்கான பிரெஞ்சு மக்கள் ஜெர்மனி வயல்களில் உழைக்கச் செல்லுவார்கள். ஜெர்மனி பிரெஞ்சு மக்களைத் தனக்கு உழைக்கப் பிறந்த அடிமைகளாகவே கருதும்.

மேலும் கூறுகையில் இப்பத்திரிகை 'மானத்தையும் கௌரவத்தையும் போர்டோ சர்க்கார் புறக்கணித்து விட்டனர் என்பது நிச்சயம். கௌரவக் குறைவான நிபந்தனைகளைக் காதில் கூடப்போட்டு கொள்ளோம் என்று வாக்குறுதி சொல்லி விட்டு, பிரான்ஸின் சரித்திரத்திலேயே மிக இழிவான சமாதானத்தில் இந்த கவர்மெண்டு கையொப்பமிட்டு விட்டது.

நல்ல வேளையாய் பிரெஞ்சு மக்கள் தம் உணர்ச்சியை உடனேயே தெரிவித்துவிட்டனர். லண்டனில் ஒரு தேசிய கமிட்டி அமைத்திருக்கிறார்கள். பிரெஞ்சு குடியேற்ற நாடுகள் கண்ணியமான குரலில் பேசிவிட்டனர். பிரான்ஸின் நிஜ சொரூபம் எழுந்து விட்டது." என்று எழுதியது.

ஏகாதசி உபந்யாஸம்.

குடந்தை

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகளின் ஆக்ஞைபிரகாரம் சோலையப்ப முதலி அக்கிரஹாரத்தின் முத்ராதிகாரியான ஸ்ரீமான் சுப்பிரமணிய அய்யர் அவர்களின் முயற்சியால் 15—7—40 ஏகாதசி யன்று மாலை 7 மணி முதல் 9 மணி வரையில் டவுன் ஹைஸ்கூல் ஆசிரியர் ஸ்ரீமான் எம். ராம்ராவ் பி. ஏ. அவர்களைக் கொண்டு ஸ்ரீ கிருஷ்ணவதார தத்வம் என்ற விஷயமாய் அரியதோர் உபந்யாஸம் செய்விக்கப் பட்டது. திரிமதல் தர்க்கஷீலுள்ள பல பிரமுகர்கள் விஜயம் செய்யதிருந்தனர். உபந்யாஸகரான ஸ்ரீ ராவ் பல மேற்கோள்களுடன் பகவான் கோபனுக வஸுதேவருடைய கிருஹத்தில் அவதரித்த காரணங்களையும், கம்ஸன் முதல் குழந்தையைக் கொல்லாதிருக்கவே நாரதர் தோன்றி ஸாதித்த தேவ காரியத்தின் தத்வத்தையும் பகவானுடைய அவதார காலத்தில் ஏற்பட்ட சுப சின்னங்கள் ஒவ்வொன்றுக்கும் ஏற்றதான உதப்ரேக்ஷையையும், அஷ்டமியில் அதிலும் ராத்திரியில் அவதரித்த காரணத்தையும் இதுவரையில் ஒருவராலும் சொல்லப் படாத பல அபூர்வ விஷயங்களையும் அனைவரும் ஆனந்திக்குமாறு விளக்கி சயன ஏகாதசியின் மகிமையையும் கொஞ்சம் எடுத்துச் சொன்னார். முடிவில் மெலட்டூர் வேதாந்த சிரோமணி வித்வான் பிர்ம ஸ்ரீ ரகுநாத சாஸ்திரிகள் உபந்யாஸகரின் ஆராய்ச்சித் திறத்தையும் அன்று கூடியிருந்தஸபையின் அமைப்பைப் பற்றியும் சிலாகித்துப் பேசினார். மேலக்காவேரி பிர்ம்ம ஸ்ரீ ராமச்சந்திர சாஸ்திரிகள் அவர்களும் அதை ஆமோதித்துப் பேசினார். கடைசியில் முத்ராதிகாரி ஸ்ரீ மணி அய்யரால் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இனிது முடிந்தது. [ந-நி]

தேவகோட்டை

ஸ்ரீமத் ராமாயண கதா காலக்ஷேபம்

நிகழும் விக்ரம-ஹு ஆனி-மீ 20வ 3—7—40 புதன்கிழமை முதல் தேவகோட்டை சிலம்பனி அக்கிரஹாரத்தில் பிக்ஷாண்டார் கோவில் பிரும்மஸ்ரீ ராமாயண கதாமிருத வருஷக பிரசங்க ரத்னம் வேதமூர்த்தி பாகவத கௌஸ்துபம் கோபால பாகவதர் அவர்களால் ஸ்ரீமத் ராமாயண ஸீரியஸ் கதா காலக்ஷேபம் ஆரம்பம் செய்து நடத்தப் பட்டு வருகிறது. அதில் 7—7—40 ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணிக்கு ஸீதா கல்யாணம் விமரிசையாக நடத்தப்பட்டது. ஷை கட்டத்தில் தேவகோட்டை ஸ்ரீமான் கே. வரதய்யங்கார் ஸ்வாமிகள் அவர்களால் புடவை, சோமன் திருமங்கல்யம் முதலிய சன்மானங்கள் செய்து மேள வாத்தியத்துடன் விசேஷமாக நடத்தப்பட்டது. ஏராளமான ஆஸ்திக ஸ்திரீ புருஷர்கள் விஜயம் செய்து கேட்டு ஆனந்தித்து வருகிறார். ஷை பாகவதரிடத்தில் தேவகோட்டை மகாஜனங்கள் விசேஷ அபிமானம் வைத்து ராமாயணத்தை சிறப்பாக நடத்தி வைப்பார்கள் என்பதில் சந்தேஹமேயில்லை என்பதற்கு இதுவே ஒரு சாக்ஷியுதமாக இருக்கிறது.

ஒரு பக்தன்.

ஆலயப்பிரவேச துக்கதினம்

சென்னை

சென்னையில் வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தின் ஆதரவின் கீழ் "ஆலயப்பிரவேச துக்கதினம்" கொண்டாடப்பட்டது. காலையில் ஸனாதனிகள் பெரிய ஊர்வலமாக பல தெருக்கள் வழியாக சென்று, ஜார்ஜ் டவுன் ஸ்ரீ கோபாலஸ்வாமி கோவிலில், பிரிட்டன் யுத்தத்தில் ஜயம் பெறுவதற்கும், ஆலயப்பிரவேசசட்டம் ரத்தாவதற்கும் பிரார்த்தனை நடத்தினார்கள்.

மாலையில் ஸ்ரீ ஸோமதேவ சர்மா தலைமையின் கீழ் ஒரு பிரம்மாண்டமான தார்மிகர்களின் கூட்டம் நடைபெற்றது. பலர் ஆலயப்பிரவேச சட்டத்தையும் காங்கிரஸின் பொருப்பற்ற தன்மையையும், கடுமையாக தாக்கி பிரசங்கித்தார்கள்.

இப்போது நடந்துவரும் மதுரை ஆலய ஸம்புரோக்ஷண வழக்கில் அரசாங்கத்தார் ஒரு விதமாகவாவது சம்பந்தப்படாமல் நடுநிலைமை வகிக்கும்படி கேட்டுக்கொள்ளப் பட்டது. (ந. நி)

திண்டுக்கல்

திண்டுக்கல் வர்ணாச்ரம சங்கத்தின் ஆதரவின் கீழ் "ஆலயப்பிரவேச துக்கதினம்" நடைபெற்றது. ஆலயப்பிரவேச சட்டத்தை கண்டித்தும், அச்சட்டத்தை மாற்றும்படியாவது, யுத்த காலத்தின்போது ரத்து செய்தாவது, ஹிந்துக்கள் முறைப்படி பிரார்த்தனை செய்ய சௌகரியம் செய்து கொடுக்குமாறு பல தீர்மானங்கள் மூலம் அரசாங்கம் வேண்டிக்கொள்ளப்பட்டது. பிரிட்டன் வெற்றி பெறும்படி மற்றும் ஓர் தீர்மானம் நிறைவேறியது. கூட்டத்திற்கு அட்வகேட் வி. ஆர். விஸ்வநாதய்யர் தலைமை வகித்தார். (ந. நி.)

ஸனாதனி ஸ்திரீகளின் தந்தி

பாலக்காடு ஸனாதன தர்ம மஹிளா சங்கத்தார்கள் சென்ற வாரம் ஓர் பொதுக்கூட்டம் நடத்தி அதில் ஆலயப்பிரவேச, சாரதா சட்டம் போன்றவைகளை வெகு பலமாகக் கண்டித்துப் பேசினார்கள். கனம் வைஸ்ராய் அவர்களுக்கு மேற்படி மஹாநாட்டுக் கார்யதரிசியால் ஒரு அவஸரத் தந்தி கொடுக்கப்பட்டு மத விரோதச் சட்டங்களை ரத்து செய்யும்படியும், ஆலயப்பிரவேசத்தால் அசுத்தமான கோவில்களுக்கு ஸம்புரோக்ஷணை செய்து ஆஸ்திக ஹிந்துக்கள் அங்கு பிரார்த்தனை நடத்த உடனே வகை செய்ய வேணுமென்றும் கோரியிருக்கிறார். (ந-நி)

சேலத்தில் ஸனாதநதர்ம பிரசாரம்.

ஸ்ரீ கே. பாலசுப்ரமண்ய அய்யர் பிரஸங்கம்.

சேலம் பிராம்மண ஸபை ஆதரவில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் சென்னை அட்வகேட் தர்மரக்ஷாமணி ஸ்ரீமான் கே. பாலஸுப்பிரமண்ய அய்யரவர்கள் ஸனாதந தர்மம், என்பதைப்பற்றி பல அரிய மேற்கோள்களுடன் சிறந்த பிரஸங்கமொன்று செய்தார். கூட்டம் நிறம்ப வந்திருந்தது. ஸ்ரீ அய்யரவர்கள் ஸனாதந தர்மதத்வத்தைப் பற்றி பேசியது அங்கு வந்தவர்களுள் மிகுந்த உணர்ச்சியைக் கொடுத்தது. ந. நி

உத்தியோகப்பற்றற்ற ஆலோசகர்கள்

நியமிக்கும் உத்தேசம்

இப்போது 93-வது பிரிவுப்படி மாகாண ஸ்வய ஆக்ஷி ரத்து செய்யப்பட்டுள்ள மாகாணங்களில் கவர்னர்களுக்கு ஆலோசனை கூறுகிறவர்கள் ஸர்க்கார் உத்யோகஸ்தர்களாகவே இருப்பதை நீக்கி இனி உத்யோகப்பற்றில்லாதவர்களையே ஆலோசகர்களாக நியமிக்கும்யோஜனையை இந்தியா கவர்ன்மெண்டார் செய்து வருவதாக பிரஸ்தாபிக்கப்படுகிறது.

கல்கத்தா ஸத்யாக்ரஹம்.

165 பேர் கைது

கல்கத்தா இருட்டறை ஞாபகச்சின்னத்தை எடுத்துவிட நடக்கும் ஸத்யாக்ரஹ இயக்கத்தில் இது வரையில் 165 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்களாம்.

வங்க சட்டஸபையில் இதைப்பற்றி அவஸரத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு தோற்றது. ஆயினும் ஸத்யாக்ரஹத்தை நிறுத்திவிட்டால், ஸுபாஷ் பாபுவின் அபிப்பிராயத்தைப்பற்றி யோஜனை செய்வதாக பிரதமமந்திரி உறுதிகூறினார். வெள்ளைக்காரர்கள்கூட மேற்படி ஞாபகச்சின்னத்தை அப்புறப்படுத்துவதற்கு ஆதரவு காட்டுகிறார்கள்.

வாலிவதம்

(ஸ்ரீ குலபதி P. A. சுப்ரமண்ய அய்யர்)
மாஜி ஹெட்மாஸ்டர் ஹிந்து ஹைஸ்கூல்
திருவல்லிக்கேணி, எழுதுகிறார்.)

ஸ்ரீ ராமர் வாலியை வதம் செய்தது நியாயமா, இல்லையா என்ற விஷயத்தைக் குறித்து நம் தேசத்தில் அநேக வருஷங்களாக அபிப்ராய பேதம் உண்டென்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். பெரும்பாலர் ஸ்ரீராமர் வாலியை மறைவில் நின்று கொண்டு பாணத்தால் கொன்றார் என்று சொல்வதே ஸஹஜம். இவ்வித அபிப்ராயம் வால்மீகி ராமாயணத்திலிருந்தே விசதமாகிறது என்றும் மொழிகின்றனர். ஆயினும் ஸ்பஷ்டமாக அவ்விதக் கொள்கைக்கு வால்மீகத்தில் போதுமான ஆதாரமில்லையென்றும் ஸ்ரீராமரது செய்கை தர்மத்தை யொட்டினதுதான் என்று வால்மீகி வாக்கியங்களைக்கொண்டே நிரூபிக்கலாம் என்றும் சிலர் கூறுகின்றனர். இது விஷயத்தைச் சற்று ஆராய்வோம்.

முதல்சண்டை

சுக்ரீவன் வாலியுடன் இரண்டு தரம் போர் புரிந்தனன். முதல் முதல் போட்ட சண்டை கிஷ்கிந்தா காண்டம் 12ம் ஸர்க்கத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ ராமர் ஒரே பாணத்தால் ஏழு ஆச்சாமரங்களையும் துளைத்ததைக்கண்டு வியந்து கைகூப்பி நின்று வாலியை ஸம்ஹரிக்க வேண்டுமெனப் பிரார்த்தித்த சுக்ரீவனுக்கு அந்தப் பிரபு, " இப்பொழுதே வாலியுடன் யுத்தத்துக்குப் புறப்படு. நீ சற்று முன்னே போய் அவனைப் போருக்கு அழை, நானும் லக்ஷ்மணன் முதலானவர்களும் பின்னே வருகிறோம் " என்றார். அவனும் அவ்விதம்செய்ய, வாலி தன் அரண்மனையினின்று வெளியில் வந்தான். உடனே இருவருக்கும் பெரும் போர் நிகழ்ந்தது. இச்சமயத்தில் கோதண்டமும் கையுமாய் நின்ற ஸ்ரீராமர் யார் வாலி, யார் சுக்ரீவன், என்று அறிந்து கொள்ளமுடியாமற் போனதால் பாணத்தை விடவில்லை. சுக்ரீவன் களைத்து சக்தியற்றவனாய் அங்குமிங்கும் பார்த்தான். ஸ்ரீ ராமரைப் பார்க்கவில்லை. ஆதலின் ரிசியமூகத்துக்கு ஓடிவந்து விட்டான். அவன் அங்கே வந்ததும் ஸ்ரீ ராமரும் மற்றவர்களும் அவனை சந்தித்தார்கள் துக்கப்பட்டு மனம் நொந்த சுக்ரீவனை ஸ்ரீ ராமர் தேற்றி, ஐய! நும்சண்டையைக் கவனித்தேன். உனக்கும் வாலிக்கும் உடல், தோற்றம், நோக்கு குரல், வார்த்தை முதலியவைகளில் யாதொரு வித்யாஸமும் எனக்குப் புலப்படாமையால் என் பாணத்தை விடுத்திலன். இப்பொழுது உன் கழுத்தில் ஒரு மாலையைச் சூட்டுவிப்பேன். அதைப் போட்டுக்கொண்டே எங்களுடன் வா, நாமெல்லோரும் சேர்ந்து போவோம் நீ மறுபடியும் வாலியை சண்டைக்கு அழை நான் உன்பக்கலில் நின்று துணைபுரிவேன் வெகு சீக்கிரத்தில் என் பாணத்தால் அடிபட்டு வாலி கீழே விழுந்து புரளுவதை நீ பார்ப்பாய் பயப்படாதே! என்று சொல்லி அவனை உற்சாகப்படுத்தினார். லக்ஷ்மணனைக் கொண்டு அவன் கழுத்தில் ஒரு மாலையைப் போட்டுவித்தார். பிறகு எல்லோரும் சேர்ந்து கிஷ்கிந்தையை நோக்கிச் சென்றனர்.

இரண்டாவது சண்டை

தர்மாத்மாவான ஸ்ரீராமர் தமது பொன் புனைந்த பெரிய வில்லை வளைத்து நாணேற்றி, சூர்யனைப்போல் ப்ரகாசிக்கும் பாணங்களை கையில் எடுத்துகொண்டு புறப்பட்டார். சுக்ரீவன் தலை வணங்கி, ராம லக்ஷ்மணர் முன்னே சென்றான். ஆஞ்சனேயரும், நளனும், நீலனும், தாரனும் பின்னே சென்றார்கள். வழியில் சுக்ரீவன் ஸ்ரீராமருக்கு ஸப்தஜன ஆச்ரமத்தின் பெருமையைக் குறித்து பேசிக்கொண்டு போனான். பின் அவர்கள் அனைவரும் வேகமாய் கிஷ்கிந்தையை அடைந்து ஓர் அடர்ந்தகாட்டில் மரங்களின் பின் மறைந்து நின்றார்கள். (A) அப்போது பருத்த கழுத்தையுடைய சுக்ரீவன் தன் பரிவாரங்கள் சூழ்ந்து நிற்க (B) நாற்புறமும் சுற்றிப்பார்த்து வெகு கோபங்கொண்டு கோரமாய் கர்ஜ்ஜித்து வாலியை யுத்தத்திற்கழைத்தான். ஸ்ரீ ராமரைப் பார்த்துத் தன் மனோபீஷ்டத்தைப்பூர்த்தி பண்ண வேண்டினன். அதற்கு ரகுநாதன் சொன்னதாவது: "ஐய, என் கையிலிருக்கும் இந்த பாணத்தால் உனக்கும் வாலிக்குமுள்ள விரோதத்தையும் அவனால் உனக்கு நேரும் பயத்தையும் போக்குகிறேன். என் பாணம் பட்டு அவன் உயிருடன் திரும்புவானாகில் நீஎன்னை நிந்திக்கலாம். நான்எப்படிப்பட்ட ஆபத்து நேர்ந்த் காலத்திலும் பொய் சொன்னதில்லை இனியும் சொல்லமாட்டேன். தர்மத்தினின்றும் வழுவ மாட்டேன். (அந்ருதம் நோக்த பூர்வம்மே........) (C) என் பிரதிக்ஞையை நிறைவேற்றுவேன். சந்தேகிக்கவேண்டாம் வாலி உன்னுடன் போருக்கு வரும் வண்ணம் கர்ஜனை செய்" இதைக்கேட்டு சுக்ரீவன் ஆகாயம் கிழிவதுபோலப் பெரும் பூசலிட்டான். (14-ம் சர்க்கம்)

இதைக் கேட்ட வாலி கோபங் கொண்டு வெளிப்புறப்பட யத்தனித்த போது, தாரை யுத்தத்துக்குப் போக வேண்டாமெனச் சொல்லித் தடுத்தாள் வாலி அதைப்புறக்கணித்தான். (15-ம் சர்க்கம்) அவள் அந்தப்புரத்துள் சென்ற பின்னர், வாலி வெளி போந்து, கோபமுற்று, நாற்புறமும் சுற்றிப் பார்த்து, சுக்ரீவனையே நோக்கின வண்ணமாய் வந்து அவனுக்கு முந்துற்று கையை உயரத்தூக்கிக் கொண்டு நின்றான். (சுக்ரீவமேவ அபிமுகோயயௌ) D சுக்ரீவனும்தன் கையை உயரத்தூக்கிக் கொண்டு வாலியை எதிர்கக, பெரும் போர் நிகழ்ந்தது. அப்போது சுக்ரீவன் வரவர இளைத்து, அடிக்கடி ஸ்ரீராமர் இருக்குமிடத்தைப் பார்த்தான்(E)(இது மன்மதநாத்ட்ட எழுதியுள்ள இங்கிலீஷ் மொழி பெயர்ப்பில் உள்ளது.) ஸ்ரீராமருக்கு வாலியைச் சுட்டிக் காட்டினான். (தர்சயாமாஸ ராகவம்) (F) இவ்வண்ணம் சுக்ரீவன் சங்கடப் படுவதை மகா பாரக்ரமசாலியான ஸ்ரீராமர் பார்த்து சர்ப்பம் போன்ற ஒரு பாணத்தை எடுத்து வில்லில் பூட்டி யமனுடைய காலச் சக்ரத்தைப் போல் அவ்வில்லை வளைத்தார். அவர் செய்த நாணோசையைக் கேட்கும் பறவைகளும் விலங்குகளும் யுகாந்த காலத்திற் போல நடுங்கி நான்கு திக்குகளிலும் ஓடின. C). ஸ்ரீராமரது வில்லிலிருந்து விடப்பட்ட அந்தப் பெரும் பாணம் தனது மார்பிற்பாய, இந்திரகுமாரனை வாலி அறிவிழந்து பூமியில் விழுந்தான்.

(16ம் சர்க்கம்).

புலப்படும் உண்மைகள்

மேற்சொன்ன விஷயங்களினின்றும் விசதமாகும் உண்மைகள் யாவை என்று விசாரிப்போம்.

முதற்போரில் சுக்ரீவன் தனியாகவே நின்றான். ஸ்ரீராமர் அவன் பக்கத்தில் இல்லை.

இரண்டாம் போருக்குச் சென்ற காலத்தில் சுக்ரீவன் ஸ்ரீராமர் முதலியவர்களுடன் சேர்ந்தேயிருந்தான்

வாலியை சண்டைக்கு அறைகூவிய காலத்தில் தன் பரிவாரங்களால் சூழப்பட்டே நின்றான். ஸ்ரீராமருடன் பேசிக் கொண்டும் இருந்தான்.

சுக்ரீவனுக்கு ஸமாதானம் சொல்லுங் காலத்து தாம் எக்காலத்திலும் பொய் சொல்வதில்லை அறவழியினின்று வழுவதில்லை என்ற ஸ்ரீராமரது வாக்கு கவனிக்கத் தக்கது.

சுக்ரீவனையே நோக்கினவண்ணமாய் வாலி வந்தான் என்ற வால்மீகி வசனத்தினின்று மற்றவர்களும் அவன் பக்கத்திலேயே நின்றார்கள் என்று நாம் ஊகிக்க வேண்டும்.

சுக்ரீவன் ஸ்ரீ ராமர் இருக்குமிடத்தைப் பார்த்தான், ஸ்ரீ ராமருக்கு வாலியைச் சுட்டிக் காட்டினான்," என்ற வாக்கியங்களைக் கொண்டு நாம் அறியவேண்டியது யாதெனில், சுக்ரீவனுக்கு எதிர் நின்று போர் புரிந்த வாலிக்கும் ஸ்ரீ ராமர் திருஷ்டி கோசரமாயிருந்திருக்க வேண்டுமென்பது தான்.

கோதண்டத்தின் நாணோசையைக் கேட்டு விலங்குகளும், பறவைகளும் நடுநடுங்கி நான்கு திசைகளிலும் ஓடியிருக்க, அவ்வோசையைக் கேட்டேனும் வாலி ஸ்ரீராமரைப் பார்த்திருக்கக் கூடாதா ?

இவைகளையெல்லாம் ஆலோசிக்குங் காலத்து ஸ்ரீ ராமர் வாலிக்கு நேரில் நின்றே பாணத்தை விடுத்தார் என்று தான் நாம் கொள்ளல் வேண்டும்.

"ப்ரிட்டன் விடப்போவதில்லை"

வெற்றியில் பூர்ண நம்பிக்கை

துருக்கிப் பத்திரிகைகளின் அபிப்பிராயம்

அங்கோரவிலிருந்து இப்போது தான் வந்த ஒரு தந்தியிலிருந்து. யுத்தத்தை தொடர்ந்து நடந்த ப்ரிட்டன் உறுதி கொண்டிருப்பதையும் கடைசியாய் வெற்றியடைவதில் அதற்குள்ள நம்பிக்கையையும் துருக்கிப் பத்திரிகைகள் அதிகமாய் எடுத்துக் கூறுவதாகத் தெரிகிறது.

ஜுன்-மீ 18-உ யன்று காமன்ஸ்சபையில் பிரதம மந்திரியவர்கள் பேசிய பேச்சைப் பற்றி அபிப்பிராயங் கூறுகையில் 'உலுஸ்' என்னும் பத்திரிகை பின்வருமாறு எழுதுகிறது:— "ஜெர்மனி பிரிட்டன் மீது படை யெடுக்க முயலுமென்றும் பிரதமந்திரி நிச்சயமாய்க் கருதுகிறார். ஆனால், பனிரண்டரை லட்சம் பேர் அடங்கிய சைன்யம் பிரிட்டிஷாரிடம் இருக்கிறது. டொமினியன்களிலிருந்து இன்னும் புதிய படைகள் வந்து சேரப்போகின்றன, அவர்களுடைய கடற்படை அப்படியே செம்மைமாய் யிருக்கிறது, அவர்களுடைய ஆகாய படை ஜெர்மனியினுடைதை விடச்சிறியதாயிருப்பினும் வரவரப் பெருகிக் கொண்டேயிருப்பதுடன் அமெரிக்க உதவியால் பின்னும் பலப்பட்டு விடும். இந்த விஷயங்களினாலெல்லாம் ஏற்படும் நம்பிக்கையோடு அவர்கள் தங்கள் தீவைக்காத்து நிற்பார்களென்பதில் சந்தேகமே யில்லை"

20-உ வெளியீட்டில் அது பின்னும் கூறுவதாவது:— "டன்காக்கிலே, ஜெர்மனியர் ஒரு விமானத்தை அழித்தால் பிரிட்டிஷார் தங்கள் எதிரி விமானங்களில் மூன்றை நாசப்படுத்தினார்கள். ஆகவே ஜெர்மனியர் பிரிட்டனையே தாக்கும் பொது பிரிட்டிஷ் விமானப் படை இன்னும் எவ்வளவோ சாதிக்குமென்றும் எதிர்பார்க்கலாம். யுத்தத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்றும் உறுதி பிரிட்டனுக்குச் சிறிதுந் தளரவில்லை யென்பதை மிஸ்டர் சர்ச்சில் தம்பிரசங்கத்தில் நிரூபித்து விட்டார்.

ஆழ்வார் திருநகரியில் ஆலயப்பிரவேச கண்டனம்

ஸ்ரீமான் கே. ராமய்யங்கார் சுற்றுபிரயாணம்

ஆழ்வார் திருநகரி ஸ்ரீ ஆண்டாள் தேவஸ்தான முன் மண்டபத்தில் சென்ற ஞாயிறன்றிரவு ஸனாதனப் பொதுக்கூட்ட மொன்று நடைபெற்றது. ஸ்ரீமத் ஆத்தான் வடக்குத் திருமாளிகை ஆதீனம் ஸ்வாமிகள் தலைமை வகித்தார். டில்லி சட்டசபையின் மாஜி அங்கத்தினர் மதுரை வக்கீல் ஸ்ரீமான் கே. ராமய்யங்கார் தற்கால நிலையில் சனாதனிகள் கடமையைப்பற்றி ஓர் பிரஸங்கம் செய்தார். சமயோசித வாதிகளே மலிந்து விட்டதாயும் மதராஸ் மாளவியாவான திவான் பகதூர் ஸ்ரீமான் வி பாஷ்யமய்யங்கார் பஞ்சமசம்ஸ்கார மூலம் ஹரிஜனங்களை கோயிலுக்குள் விடலாமென்கிறார் ஆனால் பண்டிட் மாளவியா பூணூல் போட்டு யாவரையும் பிருமணராக்குகிறார்கள் என்கிறார் என்னைக்கேட்டால் அக்ரமம் பெருத்து ஆலயப்ரவேச அதிக்ரமச்சட்டம் பாஸானதரலேயே கோர யுத்தங்கள் முதல் ஏற்பட்டிருக்கிறதாய் சொல்வேனென ஸ்ரீமான் ஐயங்கார் பிரஸ்தாபித்தார். விஷமப்ரசாரம் அதிகமாயுள்ள தற்காலம் பிருமணப்பையன்களை ஆரம்பம் முதலே நல்ல அனுஷ்டானத்துடன் பழக்கவேண்டுமெனக்கேட்டுக் கொண்டார். மதுரை அனாதை ஆஸ்ரம நிதி வசூலுக்காக ஸ்ரீ கே. ராமய்யங்கார் சுற்றுப்ப்ரயாணம் செய்து வருவதாய்த் தெரிகிறது. ஆழ்வார் திருநகரி ஸ்ரீமத் ஆத்தான் வடக்குத்திரு மாளிகை ஆதீனம் ஸ்வாமிகள் ஸ்ரீமத் எம்பெருமானார் ஜீயர் ஸ்வாமிகள் வானமாமலை மடாதிபதி ஜீயர் ஸ்வாமிகள் மற்றும் பலபிரமுகர்களும் த்ரவ்ய உபகாரமளித்ததாய் தெரிகிறது. கூட்ட முடிவில் ஸ்ரீ வெங்கடாச்சாரியார் ஸ்வாமியால் மதுரையில் ஆலயப்ரவேசம் நடைபெற்றதைக் கருதி தாம் நடத்தி வந்த மண்டகப்படி சிறப்பு வகையறாவை ஸ்ரீ ராமய்யங்கார் நிறுத்தியுள்ள தற்காகவும் பொது விஷயங்களில் ஊக்கமுடன் உழைப்பதையும் பாராட்டி பேசப்பட்டு உபசாரம் கூறப்பட்டது. ஸ்ரீமான் அயங்கார் தமக்கும் பிரும்மஸ்ரீ என். நடேசய்யருக்கும் தகராறெதுவும் கிடையாது எனவும் பிரஸ்தாபித்தார்.

ஸ்ரீமத் பகவத்கீதா உபந்யாஸம்

ஆழ்வார் திருநகரி ஸ்ரீ ஆதிநாதர் ஆழ்வார் தேவஸ்தானத்தில் சிரோமணி பண்டிட் ஸ்ரீ டி. ராமகிருஷ்ணய்யங்காரால் மிக ரமணீயமாய் ஸ்ரீமத் பகவத்கீதா உபந்யாஸம் செய்யப்பட்டு வருகிறது. தேவஸ்தான எக்ஸிகூடிவ் ஆபீஸர் ஸ்ரீ எல். ஆர் குருசாமி நாயிடு மற்றும் பல பிரமுகர்களும் சிறத்தையுடன் சென்று கேட்டு வருகின்றனர். (நவிநி)

இராமேஸ்வரம் சேவாசதனம்

ஆலயப்பிரவேச துக்கதினம்

வர்ணாச்ரம சுயராஜ்ய சங்க சேவாசதனத்தில் 8—7—40உ அன்று மாலை 6 மணிக்கு ஸேவா சதனம் பிரஸிடெண்டு ஸ்ரீ ஆர். எஸ். சுப்பிரமண்ய சாஸ்திரிகள் தலைமையில் மீட்டிங் நடந்தேறியது.

தலைவர் முன்னுரையில் காங்கிரஸ் ஆட்சியின் செய்கையான ஆலயப்பிரவேசச் சட்டத்தை கண்டித்து சுமார் ½ மணி நேரம் பல பிரமாண வசனங்களுடன் நீண்டதோர் சொற்பொழிவாற்றினார்கள்.

அதன் பின் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தீண்டாதார் ஆலயப்பிரவேசம் பழக்க வழக்கங்களுக்கும் வேதாகமே சாஸ்திரங்களுக்கும் முற்றிலும் முரண்பாடாக இருப்பதாலும் இம்மையாலும் மறுமையாலும் தேசங்களுக்கு பலவித கஷ்டங்களை விளைவிக்கக் கூடியதாக இருப்பதாலும் ஷை சட்டத்தை உடனேயே ரத்துசெய்ய வேண்டுமென்றும் கவர்ன்மெண்டாரை கேட்டுக்கொண்டும் நம் பிரிட்டிஷ் ராஜாங்கம் இம்மஹா யுத்தத்தில் பரிபூர்ண வெற்றியடைய வேண்டுமென்றும், அதை உத்தேசித்து நாம் எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திப்பதாகவும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

அதன் பின் என். வெங்கிட்டராம சர்மாவால் வந்தனோபசாரம் கூறப்பட்டு மீட்டிங் இனிது கலைந்தது.

வி. சேஷாத்ரி தீக்ஷிதர்,
காரியதரிசி.

ஸனாதனிகளின் நிலைமை.

ஸனாதனிகள் சாரதா சட்டத்தையும், காங்கிரஸ் ஆக்ஷியில் நிறைவேற்றப்பட்ட ஆலயம்பிரவேச சட்டத்தையும், தங்களுடைய ஜீவாதார உரிமையாகிய மதவிஷயங்களில் தலையிடுவதன் காரணமாக பலமாக கண்டிக்கிறார்கள்.

ஸனாதனிகளின் கொள்கை இந்திய மகா ஜனங்களில் ஏகதேசமாகவுள்ள ஒரு ஜாதி அல்லது வகுப்பைச் சேர்ந்தவர்களுக்குள் சிலரால் மாத்திரம் ஆதரிக்கப்படுவதாகவும் அது பொதுஜன அபிப்ராயமல்ல என்றும் காங்கிரஸ் காரர்கள் பிரசாரம் செய்து ஜனங்களை ஏமாற்றி வருகிறார்கள்.

இந்திய நாட்டில் கிருஸ்தவர்களும் மகம்மதியர்களும் ஹிந்துக்களும் மற்றும் எல்லா மதத்தினர்களும், தங்கள் மத விஷயங்களில் அரசாங்கமோ, சட்டசபைகளோ பிரவேசிக்கக் கூடாது என்று அபிப்ராயப் படுகிறார்கள்.

ஆகவே ஸனாதனிகளின் மத சுதந்தர கோரிக்கையை ப்ரிட்டிஷ் அரசாங்கத்தார் கவனித்து காங்கிரஸ் ஆட்சியில் நிறைவேற்றப் பட்ட அக்கிரம ஆலய பிரவேச சட்டத்தையும் இதுபோன்ற சாரதாசட்டத்தையும் மத சுதந்தரங்களை பறிக்கும் இதர சட்டங்களையும் ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

இந்திய வைஸ்ராய் அவர்கள் காங்கிரஸ்காரர்கள் பறி முதல் செய்த சுதந்திரத்தை இந்தியர்களுக்கு அளித்து, இந்தியர்களின் நன்மைகளை ரக்ஷிக்க வேண்டுமென்று கோருகிறோம்.

இது சம்பந்தமாக கவர்மெண்டார் அடியில் கண்ட பொது ஜனங்களின் அபிப்பிராயத்தை பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

“வெள்ளைக்காரரோ, காங்கிரஸ்காரரோ, ஜஸ்டிஸ்காரரோ, இன்னும் யாரானாலும் மதாநுஷ்டானங்களில் அதிகாரத்தைக் கொண்டோ, சட்டத்தைக்கொண்டோ, பிரவேசிக்காமலிருக்க சர்வமதஸ்தர்களும் சேர்ந்து ஓர் மகா சங்கம் ஏற்படுத்த தீர்மானித்துள்ளார்கள்'' அடியில் கண்ட கனவான்கள் அதற்கு கையொப்பமிட்டிருக்கிறார்கள்.

சென்னை ஸ்ரீ சொல்லா ராகவ செட்டியார், President, கன்யா பரமேசுவரி தர்ம சபை,கொத்தவால் சாவடி. திவான்பஹதூர் கோவிந்ததாஸ் சதுர்புஜதாஸ். டி. எல் வெங்கட்டராமய்யர். அட்வெகேட் டி. பி. மேதா வைர வியாபாரம். ராவ் சாகேப் ஏ. கே. ரெங்கநாதய்யர். கே. எஸ். வெங்கட்டரமணி, பி. ஏ. பி. எல். திருப்பாப்புலியூர் ராமசாமி முதலியார், ஸ்ரீ பாடலீசுவரர் கோவில் டிரஸ்டி. மஞ்சகுப்பம் டி. வி. சட கோபாசாரியார் பி. ஏ. பி. எல். அட்வொகேட். சிதம்பரம் டாக்டர் நடராஜ ஜடா வல்லபர். பொன்னம்பலம் பிள்ளை, நாவலர் ஸ்கூல். குஞ்சிதபாதம்பிள்ளை, Land Lord. ரத்தினசபாபதி செட்டியார், வியாபாம். பரங்கிபேட்டை மகம்மது பாலா மரக்காயர், சீயாழி கே. சிதம்பர முதலியார், கும்பகோணம் ஆர். கந்தசாமி மூப்பனர், தஞ்சாவூர் கே. அநந்தராமய்யர், பி ஏ. பி எல்., அட்வொகேட், பி. எஸ். சீதாராமய்யர், Rtd Sub Judge. கோவிந்தராஜலு பிள்ளை, வியாபாரம், கோவிந்தசாமி பிள்ளை, வியாபாரம், பி. ஆர். நடேசய்யர் பி ஏ. பி எல்., திவான்பகதூர் என். சுவாமி நாதய்யர், Rtd Chief Engineer, மன்னார்குடி ராவ்பகதூர் கே. ஜி. சீனிவாச முதலியார், சேலம் ஜனப் மௌலானாமௌல்வி ஜம்ஸுதீன் மகமத், சேலம் அங்கப்பபிள்ளை ஓய். கே. சேஷய்யர், பி எல். பி எல்., நெல்லூர் ரேபாலா பட்டாபிராம ரெட்டி, இங்குவா, ஸ்ரீ கிருஷ்ணய்யர், பி ஏ. பி எல்., எல்லூர் மோதே கங்கராஜு, குண்டூர் காசி கிருஷ்ணமாசாரியார், ஜி. வி. சீனிவாச ராவ், பி ஏ. பி. எல்., வி. எல். நரசிம்மம், புஷ்பகிரி மடம், மேலகோதாவரி நரஸாப்பூர் கலா சுப்பராவ், பெஜவாடா குண்டூர் வெங்கட்ட ரெட்டி, பி. ஏ. ஆந்த்ரா இஞ்ஜினீரிங் ஒர்க்ஸ், ராஜமகேந்திரம் வீரகண்டி லக்ஷ்மீ நாசிம்மம், பி ஏ. பி எல்., காண்ட்ரேகுல ஸ்ரீநிவாஸ ராவ்பகதூர், ஜமீன்தார், காளிப் பட்டணம். (ந.நி.)

ஓர் சந்தேகம்

ஒருவன், அன்னியகோத்திரம் அன்னிய ஸூத்திரத்தில் ஸ்வீகாரம், புகுந்தால் அவனுடைய விவாஹ காலத்தில் விரதத்தை அன்னிய சாகையைச்சார்ந்த ஜனகபிதா வானவன் செய்யலாமா. இதில் நாந்தி எந்த வர்க்கத்தைச்சார்ந்த பித்ருக்களுக்கு என்ற விபரத்தை வித்வான்கள் ஆரியதர்மம் மூலமாக தெரிவிக்கவேணுமாய் கேட்டு கொள்கிறேன்

ஓர் சந்தேகி

ஆலயப் பிரவேசம்.

காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களாலும் மதிப்பிற்குரிய அறிஞர் பலராலும் புகழ்ப் பெற்ற ஓர் சம்பாஷணை புஸ்தகம். சீர்திருத்தகாரர்களால் ஹரிஜன ஆலயப் பிரவேசத்திற்கு அனுகூலமாகக் கூறப்படும் யுக்திகளை தகர்த்தெறியக்கூடிய பிரமாண பிரதியுக்தி வாதங்களுடன் கூடியதுடன் ஸனாதன ஹிந்து மதத்தின் பெருமையை எளிய தமிழ் நடையில் விளக்கும் புத்தகம் இது ஒன்றே. ஒவ்வொரு ஹிந்துவும் கட்டாயம் படிக்கவேண்டிய நூல். அணா6. தபால் ஸ்டாம்புகள் அனுப்பி கீழ்க்கண்டவரிடமிருந்து பெற்றுக்கொள்ளவும்.

கண்டமங்கலம்
பாலசுப்பிரமணிய அய்யர்,
10,பிலாத்தோப்பு, மயிலாப்பூர், மதராஸ்.

போலிகள் ஜாக்கிரதை!

அமிர்தாஞ்சனம்

எல்லா வலிகளுக்கும் துன்பங்களுக்கும் கைகண்ட இந்தியமருந்து இதுவே.

ஆயிரக்கணக்கானவர்கள் விற்கிறார்கள்

* * *

அமிர்தாஞ்சன் லிமிடெட்,

படை மருந்து

தேம்பல், படை முதலிய வியாதிகளைத் தீர்க்கும்.

சிதம்பரம்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகள் அவர்கள் சிதம்பரத்திற்கு விஜயம் செய்து ஸ்ரீ நடராஜர், ஸ்ரீ தில்லை கோவிந்தராஜ ஸ்வாமி தரிசனம் செய்துவிட்டு விரைவாகச்சென்றுவிட்டார். அநேகர் இவரை தரிசிக்கக்காத்திருந்தார்கள். ஸ்ரீமான் ராஜபாலசுப்ரமண்ய ஜடாவல்லபர் (தென்னாற்காடுஜில்லா வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்க காரியதரிசி) ஸ்வாமிகளை சந்தித்துதரிசித்தார். இந்நகரின்கண் வர்ணாச்ரம அபிவிருத்தியைப் பற்றி ஜகத்குரு விசாரித்ததாகக்கூறப்படுகிறது.

ஸ்ரீ ஜகத்குரு கருப்பூர் விஜயம்.

ஜெகத்குரு ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் அவர்கள் ஜூலை 4உ கருப்பூருக்கு விஜயம் செய்தார். ஷை கிராமத்தில் எல்லோரும் சந்தோஷ ஆரவாரத்துடன், பூர்ண கும்பத்துடன் பக்திசிரத்தையுடன் வரவேற்றார்கள் வெல்லம் படுகை மைனரும், பிரபல மிராசுதாரரும், ஸனாதன தர்ம கைங்கர்யங்களில் பக்தி, சிரத்தை, ஊக்கமுடையவருமான, ஸ்ரீமான் வி. எஸ். சீனுவாசராகவய்யர் அவர்களது முயற்சியால் ஷை கிராமத்தில் தக்க முறையில் பிக்ஷை நடைபெற்றது. பெரியாம் நடேசய்யர் அவர்கள் கிருஹத்தில் இரவு பூஜை நடைபெற்றன. ஸ்ரீமான் கே. குஞ்சிதபாதம் அவர்களால் பாதபூஜையும், மறு தினம் அப்பாவையர் கிருஹத்தில் கிராம சமஷ்டியால் பிக்ஷையும், குதூகலமாய் நடந்தேறியது அன்றிரவு பெரியாம் ராமய்யர் அவர்களது கிரஹத்தில் வர்ணாஸ்ரம தர்ம முன்னேற்றவிஷயமாக ஓர் உபன்னியாசம் மஹா சன்னிதானத்தில் நடைபெற்றது. ஜெகத்குரு அவர்கள் மறுதினம் ஓமாம்புலியூருக்கு விஜயம் செய்தார்.

அன்னதானம்

பல்லவராயப்பட்டு ஸ்ரீ ரத்தினசபாபதி பிள்ளை தர்ம சத்திரத்தில், சிதம்பரம் ஆனி திருமஞ்சனம் உத்ஸவத்தின் போது பத்து தினங்களும் ஏழைகளுக்கு பிராம்மண சமாராதனை ஸ்ரீமான் எஸ். ராமசாமிஅய்யர் அவர்கள் முயற்சியால் செவ்வனே நடைபெற்றது. வி. நாராயண அய்யர்.

சிவாஜி மஹாராஜாவைப் பற்றிய விபரங்கள்.

பரமாநந்த கவீந்தரால் இயற்றப்பெற்று தஞ்சாவூர் ஸரஸ்வதி மந்திரத்திலிருந்து எடுத்துக்கொண்டு போகப்பட்டு 12 வருஷங்களுக்கு முன் பூனாவில் பிரசுரம் செய்யபட்ட "அனுபுராணம்" என்னும் ஸம்ஸ்கிருத காவ்யம் சிவாஜி மஹாராஜாவைக் குறித்து மிகவும் முக்யமான சில விபரங்களை கூறுகின்றது. என்று ஹிஸ்டாரிகல் ரிகார்ட்ஸ் கமிஷன் கண்டுபிடித்து வெளியிட்டிருக்கிறது.

சிவாஜி மஹாராஜாவுடன் கூட இருந்து வாழ்ந்தவர் இப்பரமாநந்தர். 1666-ம் வருஷம் சிவாஜிமஹாராஜாவுடனே அவுரங்கசீப்பைக்காணச் சென்றவர்களில் இவரும் ஒருவர். ஜெய்பூர் ஸமஸ்தானத்திலிருந்து கிடைத்த சில ஹிந்தி கடிதங்களிலிருந்து இவ்விஷயம் ஸந்தேகாஸ்பதமின்றி நிச்சயிக்க முடிகிறது.

இக்காவ்யத்தின் சற்றேறக்குறைய மூன்றில் ஓர் பாகமே நமக்கு இப்பொழுது கிடைத்திருக்கிறது. இதர பாகங்களையும் தேடிக்கண்டுபிடிக்க வேண்டியது அவச்யமான கடமையாகும். சிவாஜி மஹாராஜாவின் ஜீவிய சரித்திரத்தை யதார்த்தமாக வெளியிட முக்ய ஆதாரமாகும் இது.

அப்ஸல்கான்-சிவாஜி ஸம்பந்தமான அசல் பர்மன் ஒன்றும்ஷை கமிஷனுக்கு கிடைத்திருக்கிறது. இதிலிருந்து அப்ஸல்கான் சிவாஜி மஹாராஜாவின்மீது படையெடுத்து சென்றபொழுது, முன்னெச்சரிக்கையாகவும் தற்காப்புக்காகவும் விஷான் காட்டிஉள்ள கேல்னா கோட்டை உத்யோகஸ்தர்களின் உதவியையும் பெற்றிருந்தான் என்றும் சிவாஜி மஹாராஜாவை நாலா பக்கத்திலும் வளைத்துக்கொண்டுவிட ஏற்பாடுகள் செய்திருந்தான் என்றும் புலப்படுகிறது.

கே. வி.

ஓர் ப்ரபல தார்மிக விவாஹம்

சென்னை வர்ணாச்ரமஸ்வராஜ்ய ஸங்க கார்யதர்சி ராஜமான்ய ஸ்ரீ தண்டலம் ராமஸ்வாமி அய்யரவர்கள் கன்யகைக்கு சென்ற ஞாயிறன்று ஸ்ரீ லலிதாஸதநத்தில் விவாஹம் நடைபெற்றது. ஸ்ரீமான் அய்யரவர்கள் நித்யமே ஔபாஸநம் செய்பவர். ஓர் பக்ஷமாகவே பண்டிதர்களைக் கொண்டு விவாஹப்ரயோகம் மந்த்ரார்த்தவிசாரம் செய்தார்.

விவாஹத்திற்கு ஜஸ்டிஸ் வரதாசாரியர் பிரும்மஸ்ரீ அ. சின்னசாமிசாஸ்திரிகள், வெங்கடேச தீக்ஷிதர் ராமசந்த்ர தீக்ஷிதர் சோமதேவசர்மா ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகள் ப்ரஸாதத்துடன் பிரும்மஸ்ரீ வைத்திநாதசாஸ்திரிகள் முதலிய பண்டிதர்கள் கூடியிருந்தனர். வந்தவர்களுக்கு தக்க ஸம்பாவனை செய்து ஆசீர்வாதத்தைப் பெற்றார். விதிப்படி 4 நாள் அபரிமித அன்னதானத்துடன் விவாஹம் நடைபெற்றது. (ந. நி.)

யஜுர் உபாகர்ம விஷயம்

இவ்வருஷத்திய உபாகர்மானவை ஸ்ரீரங்கம் பஞ்சாங்கத்தில் ஆவணி மாதம் 2-உ செய்ய வேண்டு மென்றும் கஞ்சநூர்பஞ்சாங்கத்திலும் மலையாளம் கேரளபஞ்சாங்கத்திலும் ஆடி மாதம் 4-உ செய்யவேண்டு மென்றும் குறிப்பிட்டிருக்கிறது. முக்யகாலமாகிய ஆவணி மாதத்தில் என்னதோஷம் என்று தெரியவில்லை தயவுசெய்து இது விஷயம் பண்டிதர்கள் நிர்ணயித்து உபாகர்மாவை எந்த மாதத்தில் செய்யவேண்டியதென வரையறுத்து இப்பத்திரிகை வாயிலாக அறிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். ம. அ. வெங்கடேசுவர சர்மா

ஸ்ரீவியாஸ பூஜா.

திருக்குற்றாலம்

மடாதிபதி லித்தேஸ்வரீ பீடப்ரதிஷ்டாபனாசார்ய ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யவர்ய ஸ்ரீ சிவ சிதானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள் என்னும் பிரசித்தி பெற்ற ஸ்ரீ மௌனானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள் ஸ்ரீவிக்ரமஹூ ஆடிமீ 4உ சுக்கிரவாரம் சரியான 1940ஹு ஜூலைமீ 19உ திருநெல்வேலி ஜில்லா தென்காசி தாலூக்கா, திருக்குற்றால க்ஷேத்திரத்தில் ஸ்ரீஸ்வாமிகளால் நிர்மாணிக்கப்பட்ட ஸ்ரீ தத்தாத்ரேய மந்திரத்தில் ஸ்ரீ வியாஸ பூஜா மஹோற்சவத்தை நடத்துவதாய் கிருபை செய்திருக்கிறார்களானதால் பக்தர்கள் எல்லோரும் விஜயம் செய்து, இந்த வியாஸ பூஜையைப் பார்த்து ஆனந்தித்து மந்திராக்ஷதை பிரஸாதமும் ஸ்ரீ ஸ்வாமிகள் அனுக்கிரஹமும் அடையுமாறு விரும்பப் படுகிறது. பக்தர்கள்.

Printed by S. Kalyanasundaram at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road Kumbakonam.
Published by A. Gopaladesikachariar and S, Kalyanasundaram.